உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 28 ஞாயிற்றுக்கிழமை (10-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:77

10 முஸ்லிம்களின் படுகொலை தொடர்பாக

# அனுருத்த ரத்வத்த நேற்று 4ஆம் மாடியில் விசாரணை!

## நான்கு மணி நேரம் நடந்தது



கொழும்பு,பெப்ரவரி10

**முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைமையகமான நான்காவதுமாடியில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டார்.**

**கண்டி மடவள நகரில் கடந்த பொதுத்தேர்தல் தினத்தன்று பத்து முஸ்லிம்கள் கோரமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியினர் அவரை சுமார் 4மணி நேரம் துருவித் துருவி விசாரித்தனர்.**

மடவள படுகொலைகள் தொடர்பான விசாரணைக்கு சமுகமளிக்குமாறு ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு விடுத்திருந்தனர். அந்த அழைப்பை ஏற்று அவர் நேற்றுக் காலை பொலீஸ் தலைமையகத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

சி.ஐ.டியினர் அவரை காலை 10.30 மணிமுதல் பிற்பகல் 3மணி வரை விசாரணைக்கு உட்படுத்தி வாக்கு மூலத்தை பதிவு செய்தனர்.

பொதுத் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு முடிந்த கையோடு 'வாக்குப் பெட்டிகளை ஏற்றிவந்த வாகன அணி ஒன்றுக்குப் பாதுகாப்பாகச் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றின் மீது மடவள நகரப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் பத்து முஸ்லிம் இளைஞர்கள் பலியாகியமை தெரிந்ததே.

இச்சம்பவத்துடன் தொடர்புடை

(12ஆம் பக்கம் பார்க்க)



கண்டி நெடுஞ்சாலையைத் திறப்பதற்கான ஏற்பாட்டுப் பணிகள் ஓமந்தைப் பகுதியில் நடைபெற்று வருகின்றன. புலிகளும், அரசுப் படையினரும் தத்தமது பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிகளை அகற்றும் பணியை ஆரம்பித்துள்ளனர். ஓமந்தைப் பகுதியில் படைச் சிப்பாய்கள் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# கப்பல் பயண அனுமதியை விரைவாக வழங்க ஏற்பாடு

## திருகோணமலையில் புதிய நடைமுறை

திருகோணமலை,பெப்.10

திருகோணமலையில் இருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் பயண அனுமதி மற்றும் பயணச்சீட்டு பெறுவதில் இருந்து வந்த கெடுபிடிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இதன்படி -

திருமலையில் உள்ள கப்பல் முகவரிடம் இருந்து பயண விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து ஒப்படைத்து நான்கு நாள்களுக்குள் பயண அனுமதியும், பயணச்சீட்டும் வழங்கப்படும்.

இந்தப் புதிய நடைமுறை நாளை முதல் அமுலுக்கு வரும் என்று திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

பயண முகவர் நிலையத்தில் பயணிகள் ஒப்படைக்கும் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலித்து அனுமதி வழங்குவதற்காக வாரத்தில் ஐந்து தினங்கள் கடற்படை உத்தியோகத்தர்கள் அங்கு பணிபுரிவர் என்றும் -

பயண முகவர் நிலையத்தில் வைத்தே பயண அனுமதியும் பயணச்

(12ஆம் பக்கம் பார்க்க)

ஆறுமாத கால இடைவெளியின் பின்

# வடமராட்சிப் பிரதேச மீனவர்கள் நேற்று தொழிலுக்குச் சென்றனர்

வடமராட்சி,பெப்.10

வடமராட்சிக் கடலில் ஆறுமாத கால இடைவெளிக்குப் பின்னர் கடற்றொழிலாளர்கள் நேற்று தொழிலில் ஈடுபட்டனர்.

யாழ்.செயலகம் முன்பாக கடந்த 10 தினங்கள் கடற்றொழிலாளர்கள் நடத்திவந்த மறியற்போராட்டத்தின் பயனாக தொண்டமனாறு முதல் பருத்தித்துறை வரையான கடற்பகுதியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு தளர்த்தியிருந்தது தெரிந்ததே.

அந்தப் பகுதியில் அதிகாலை 4.30 மணிமுதல் மாலை 6மணிவரை மீன்பிடிக்க அரசு அனுமதி வழங்கியிருந்தது.

இதன்படி வல்வெட்டித்துறை, பொலிகண்டி, மயிலியனை ஆகிய பகுதி மீனவர்கள் நேற்று அதிகாலைமுதல் தமது தொழிலில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு பருத்தித்துறைக்குச் சென்ற இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அங்கு படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதை அடுத்து கடற்றொழிலாளர்கள் தமது கட்டுமரங்களை எடுக்க அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று அதிகாலை 4.30 மணிக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

கண்டி வீதித் திறப்பு ஏற்பாடுகள்:

# அமைச்சர் மிலிந்த மொறகொட வவுனியா சென்று ஆராய்வு!

வவுனியா,பெப்.10

வவுனியா - யாழ்ப்பாணம் கண்டி வீதியை (ஏ9) எதிர்வரும் 15ஆம் திகதி திறப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல றொஹான் தளுவத்த, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் சகிதம் வவுனியா வந்த அமைச்சர், ஓமந்தைப் பகுதிக்கும் சென்றார்.

பாதை திறப்பதற்கு முன்னோடியாக் கண்ணிவெடி அகற்றல் மற்றும வீதி புனரமைப்புப் பணிகள் தற்சமயம் அங்கு இடம்பெற்றுவருகின்றன. அந்தப் பணிகளை அமைச்சர் பார்வை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு பங்களாதேஷில் பயிற்சி

கொழும்பு,பெப்.10

இலங்கைக் கடற்படையினருக்கு பங்களாதேஷில் விசேட பயிற்சி வழங்க அந்நாட்டுக் கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ஏ.தாகிர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள அவர் இலங்கைக் கடற்படைத் தளபதியுடன் நடத்திய பேச்சுக்களின்போதே இவ்வாறு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோதமாக இத்தாலிக்கு வருவோரைக் கட்டுப்படுத்துக!

## இலங்கைக்கு அந்நாடு ஆலோசனை

கொழும்பு,பெப்.10

நாட்டில் இருந்து சட்டவிரோதமாக படகுகளில் இத்தாலிக்குச் செல்ல முயல்வோரை அரசு எச்சரித்திருக்கிறது.

நாட்டின் மேற்குக் கரை ஊடாகச் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குப் படகுகளில் ஆள்களைக் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதை அடுத்தே அரசு இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயலும் இலங்கையர்களைக் கட்டுப்படுத்த கரையோரக் கண்காணிப்பைத் தீவிரதப்படுத்துமாறு இத்தாலிய அரசு இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும்-

இதனையடுத்து நீர்கொழும்பு உட்பட நாட்டின் மேற்குக் கரையோ

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையை கோட்டை விட்டது கூட்டமைப்பு

திருகோணமலை,பெப்.10

திருகோணமலை நகரசபை, பட்டணமும் சூழலும் பிரதேசசபை ஆகியவற்றுக்கு தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு சார்பில் சுயேச்சைக் குழுக்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நேரத்துக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தே அந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் மகாராணியின் இளைய சகோதரி

# இளவரசி மாகிரேட் நேற்றுக் காலமானார்!



பக்கிங்ஹாம்,பெப்.10

பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தின் 'இளைய சகோதரியான இளவரசி மாகிரேட் தனது 71ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு கடந்த வெள்ளியன்று இருதயக்கோளாறு ஏற்பட்டதை அடுத்து லண்டன் 'கிங் எட்வேட்' மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுக் காலை 6.30 மணியளவில் 'ஆழ்ந்த உறக்கத்தில்' அவரது உயிர் பிரிந்ததாக பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து வெளியான முதலாவது உத்தியோகபூர்வ அறிக்கை தெரிவித்தது. இளவரசியின் உடல் வைக்கப்பட்ட பேழை மருத்துவமனையில் இருந்து நேற்று மாலை கென்சிங்ரன் மாளிகைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு வைக்கப்பட்டது.

இறுதிச்சடங்குகள் அரச முறைப்படி அடுத்தவாரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நோய்ப்படுக்கையில் இருக்கும் மாகிரேடின் தாயார்(வயது101) மகளது இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

# பொருள்களுக்கான தட்டுப்பாடு வன்னியில் இன்னமும் நீடிப்பு!

வவுனியா,பெப்.10

வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டபோதும் அங்கு குழந்தைகளுக்கான பால்மா மற்றும் மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தினமும் லொறிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றபோதிலும் பொருள் தட்டுப்பாடு அங்கு பெரியளவில் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மருந்துப் பொருள்கள் எடுத்துச் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்காததால், அங்கு அவசர மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்பட்டது.

சத்திரசிகிச்சைக்குரிய மருந்து வகைகள் அறவே இல்லை என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா நகரில் இருந்து வர்த்தகர்கள் தாம் விரும்பியபடி பொருள்களை வன்னிக்கு எடுத்துச்செல்லமுடியாதுள்ளது என்றும் -

முதலில் பொருள்களின் பட்டியலை படையினரிடம் சமர்ப்பித்து அவர்கள் அனுமதிக்கும் பொருள்களை மட்டுமே எடுத்துச்செல்ல முடிகிறது என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# செயலகம் நேற்றுத் திறக்கப்பட்டது நாளைமுதல் வழமையான பணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.10

கடற்றொழிலாளர் மேற்கொண்ட மறியற்போராட்டம் காரணமாக கடந்த 10 தினங்களாக மூடப்பட்டுக் கிடந்த யாழ். செயலகம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது.

கடந்த மாதம் 30ஆம் திகதிமுதல் கடற்றொழிலாளர்கள் யாழ். செயலகம் முன்பாக மறியற்போராட்டம் மேற்கொண்டனர். இதனால் செயலகப் பணிகள் யாவும் செயலிழந்திருந்தன.

கடற்றொழிலாளர்கள் தமது போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்ததை அடுத்து செயலகப் பணிகள் மீண்டும் நேற்று ஆரம்பமாகின.

அரச அதிபர், மேலதிக அரச அதிபர் உட்பட அதிகாரிகள் நேற்று சமுகமளித்திருந்தனர்.

நேற்று விடுமுறை நாளாக இருந்த போதும் கணிசமான எண்ணிக்கையான ஊழியர்கள் கடமைக்கு வந்திருந்தனர்.

நாளை திங்கட்கிழமைமுதல் செயலகப் பணிகள் வழமைபோல் இடம்பெறும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-10-180)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.10

தும்பளை புனித லூர்து அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ். ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும்

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெறும்.

நாளை திருநாள் திருப்பலிகள், முதற் திருப்பலி காலை 6.30 மணிக்கும் இரண்டாம் திருப்பலி யாழ். ஆயர் தலைமையில் 7.30 மணிக்கும் நடைபெறும். (ஐ-8)

★ ★ ★

காரைநகர் களபூமி கிளுவனை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளது.

பூர்வாங்கக் கிரியைகள் விநாயக வணக்கத்துடன் நேற்று ஆரம்பமாகின. (ஐ-73)

★ ★ ★

ஊரெழு மடத்துவாசல் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறும். (ஐ-72)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் லீக்கின் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் இரு பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் ஆகிய வலயங்களில் 12 வயதுக்கு உட்பட்ட அணிகளைக்கொண்ட பாடசாலைகளுக்கு பந்துகளை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும் இக்கூட்டத்தில் இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஊக்குவிப்பு நன்கொடைகளை வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்தில் இடம்பெறவுள்ளது.

'திருவள்ளுவர் சமுதாயக் கல்விச் சகாயநிதி' என்ற இக்கொடுப்பனவுகள் ஆறாம் தரத்தில் கல்வி பயிலும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் -

எதிர்வரும் 16ஆம் திகதிமுதல் ஒரு வாரகாலம் கல்விச் சகாய[illegible]யை பெருக்குவதற்கான கொடிவாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாகவும் -

சபைச் செயலாளர் கலாநிதி [illegible]நாதன் தெரிவித்தார். (ஐ-9)

★ ★ ★

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பிராந்திய நிலையத்தில் தற்போது சட்டமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் உட்பட அங்கு கல்வி கற்கும் அனைத்து துறைசார் மாணவர்களையும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பிறவுன் வீதியில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தின் கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-8)

★ ★ ★

மானிப்பாய் கேணிற்பற்று லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் சுகாதாரப் பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் நடைபெறும்.

கண் பரிசோதனை, இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் விசேட வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-152)

# அரியாலையில் குடும்பஸ்தர் மிதிவெடியால் கால் இழப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.10

அரியாலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது இடது காலை முழங்காலுடன் இழந்தார்.

அரியாலை மாம்பழம்சந்தியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இமதிபழகன் (வயது 26) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெடுங்குளம் சந்திப் பகுதியில் உள்ள தமது காணியைத் துப்பரவு செய்யச் சென்ற வேளையிலேயே இவர் மிதிவெடியில் சிக்கினார்.

இவருடன் சென்ற அரியாலையைச் சேர்ந்த எஸ்.உதயகுமார் (வயது 24) என்பவரும் காயமடைநது யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3-10-180)

# துறைமுகப் பணிகள் இனிமேல் இரவு 10 மணிவரை நடைபெறும்

யாழ்ப்பாணம்,பெப்.10

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணியை இன்றுமுதல் இரவு 10 மணிவரை மேற்கொள்ள வடபிராந்திய கடற்படைத் தளபதி அனுமதி வழங்கியுள்ளார்.

கடற்றொழிலாளர் பேராட்டத்துக்கு ஆதரவாக துறைமுகத் தொழிலாளர்களும் வேலைகளைப் பகிஷ்கரித்ததால் கடந்த சில தினங்களாக அங்கு பணிகள் இடம்பெறவில்லை.

இதன் காரணமாக அங்கு தரித்துள்ள மூன்று கப்பல்களில் இருந்தும் பொருள்களை இறக்க வசதியாக துறைமுகப் பணிகளை இரவு 10 மணிவரை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வடபிராந்திய கடற்படைத் தளபதியைக் கேட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கடற்படைத் தளபதி இரவு 10 மணிவரை கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்க அனுமதி வழங்கியுள்ளார்.

'பொல்கொட', 'வாதுவ', 'ஹெந்தல' ஆகிய கப்பல்கள் பொருள்களை இறக்கமுடியாது காத்திருக்கின்றன.

துறைமுகத் தொழிலாளர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு நேற்று வேலைக்குத் திரும்பியதால் துறைமுக வேலைகள் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளன. (ஐ-3)

## யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யாழ்ப்பாணம்,பெப்.10

யெகோவாவின் சாட்சிகளுடைய ஒருநாள் விசேட மாநாடு இன்று காலைமுதல் மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் - பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்ற பொருளில் இந்த மாநாடு காலை 9.50 மணிமுதல் பிற்பகல் 3.55 மணிவரை இடம்பெறும்.

பிற்பகல் 2.55 மணிக்கு "தெய்வீக கீழ்ப்படிதலால் பயனடைதல்" என்ற தலைப்பிலான பொதுஉரையும் இடம்பெறும். (ஐ-7)

# இரத்த தானம் செய்ய முன்வருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்குத் தேவையான இரத்தத்தை தானமாக வழங்க பொதுமக்கள் முன்வர வேண்டும்.

இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இ.சிவசங்கர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் பல்வேறு நோயாளர்களுக்கும் மாதாந்தம் 250 பைந் இரத்தம் தேவைப்படுகின்றது. ஆனால் தற்போது 200 பைந் இரத்தமே சேகரிக்கப்படுகின்றது.

எனவே பொது அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்தோர் இரத்ததானம் வழங்க முன்வர வேண்டும்.

சமுதாயப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கான பாராட்டு விழாக்களை நடத்துபவர்களும், நினைவு தினத்தைக் கொண்டாடுபவர்களும் அன்றைய தினத்தில் இரத்ததானம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு வைத்திய கலாநிதி மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7-180)

# கிராமத்துக்கு நீர் விநியோகம்

முளாய்,பெப்.10

அராலியிலுள்ள 'ஊரத்தி' என்ற கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் மேற்படி கிராமத்துக்கான குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அராலியின் ஏனைய பகுதிகளில் ஏற்கனவே குழாய் மூலமான நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ-99)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.10

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம் நடத்தும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் இன்று காலை முதல் இடம்பெறவுள்ளன. (ஐ-7)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.10

ஆனைக்கோட்டை லெவிண் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 10 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் வி.கவும் லெவிண் ஸ்ரார் வி.கவும் மோதும்.

நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-3)

# விஞ்ஞான வினா - விடை போட்டி

கோப்பாய்,பெப்.10

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே வருடாந்தம் நடத்தும் விஞ்ஞான வினா-விடைப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்றும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

★பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் யாழ். பரியோவான் கல்லூரி

★ வேம்படி மகளிர் கல்லூரி எதிர் யாழ்.இந்துக்கல்லூரி

மேற்படி போட்டிகள் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவியாக அமையக்கூடுமாகையால் பார்வையாளர்களாக மாணவர்களும் மற்றும் ஆர்வலர்களும் கலந்துகொண்டு பயன் பெறலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-72)

## வாசகர் திருமுகம்

### அரசியல்வாதிகளின் பட்டியலில் ஆயரைச் சேர்ப்பது மூடத்தனம்

02.01.2002 அன்று உதயன் பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் வெளியான "ஆத்திரமூட்டினாலும் உணர்ச்சிவசப்படக்கூடாது - நிரந்தர சமாதானத்துக்கு நிச்சயமானதோர் அறிகுறி - புலிகளுக்கு மன்னார் ஆயர் கடிதம்" என்ற செய்தி தொடர்பாக 08.01.2002 'உதயன்' பத்திரிகை 7ஆம் பக்கத்தில் "ஆயரின் கடிதத்தில் அரசு சார்பு ஊடுருவலா?" என சுன்னாகத்திலிருந்து காயத்திரி எழுதிய வாசகர் திருமுக கடிதம் தொடர்பாக இக்குறிப்பினை எழுதுகிறேன்.

காயத்திரி எழுதிய கடிதம் விடயத்தை தெளிவாக விளங்காமல் எழுதப்பட்டதும் கண்டிக்கப்படத்தக்கதுமாகும். எடுத்த எடுப்பிலேயே ஆயரின் கடிதம் அரச சார்பு உடையது, அடிவருடித்தனமானது என்று எதை அடிப்படையாக வைத்து இவர் கூறுகிறார் என்பது புரியவில்லை.

கத்தோலிக்க மதத் தலைவர்களான ஆயர்கள், தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகள் சார்பாகக் குரல் கொடுத்துக்கொண்டு வருபவர்கள். அவர்கள் மதத் தலைவர்கள் என்கின்ற வகையில் ஒரு பக்கமும் சாராதவர்கள். வன்முறையை எந்தப் பக்கத்திலிருந்தும் வரவேற்காதவர்கள்.

இன்னும் குறிப்பாக மன்னார் ஆயர் எப்போதுமே நீதிக்காக குரல் கொடுக்கின்றவர். கண்டிக்க வேண்டிய இடத்தில் அரசையோ புலிகளையோ கண்டிக்கத் தயங்காதவர். இது அனைவரும் அறிந்த உண்மையாகும். இப்படிப்பட்ட ஆயருடைய செய்தியை அரசசார்பு உடையது, அடிவருடித்தனமானது என்று கூறுவதை எக்காரணம் கொண்டும் பொறுத்துக்கொள்ளவே முடியாது. 'அடிவருடித்தனமானது' என்ற வார்த்தை இங்கு பாவிக்கப்பட்டிருக்கவே கூடாது.

'ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு' என்று போதிக்கின்ற ஆயர், கூறிய கருத்து என்னவென்றால், 'அரச தரப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டாலும் உடனடியாகவே உணர்ச்சிவசப்பட்டு எதிர்த்துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல் தமிழ் மக்களுடைய நீண்டகாலத் துன்பங்களையும், சமாதானம் கிடைக்க வேண்டும் என்ற ஏக்கத்தையும் மனதில் கொண்டு கவனமாக செயற்பட வேண்டும். உணர்ச்சிவசப்பட்ட நிலையில் உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை இயன்றவரை தவிர்த்து சமாதான முயற்சிகளை குழப்பாமல் இருக்க முயலவேண்டும்' - என்ற கருத்துப்படவே அவர் தெரிவித்துள்ளார்.

இது அரசசார்புடையது, அடிவருடித்தனமானது என்று எப்படிக் கூற முடியும்? விடுதலைப் புலிகள் உணர்ச்சிவசப்படகூடாது என்று குறிப்பிட்டதில் மனவருத்தப்பட என்ன இருக்கிறது? விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்த அறிவிப்பும் அதன்மூலம் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பதையும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில உலகிற்குத் தெரியப்படுத்தினார்கள் என்று யார் கூறியது?

மன்னார் ஆயர் இனத்தின் தேவையை அறிந்தே கருத்துக்களை வெளியிடுகிறார் என்பதை தெளிவாக புரிந்துகொள்வதும் அரசியல்வாதிகள் பட்டியலில் மதிப்புக்குமுரிய ஆயருடைய பெயரைச் சேர்ப்பது மூடத்தனமானது என்பதையும் காயத்திரிக்கு தெளிவாக தெரிவிக்க விரும்புகிறேன்.

*இல.36, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.* - கரோலீன்-

### மண்எண்ணெய் விநியோகம் குறித்து நீர்வேலி கூட்டுறவுச் சங்கம் விளக்கம்

"சங்கங்களுக்கு வரும் மண்எண்ணெய் மக்களுக்கு சீராக கிடைக்குமா?" என 03.02.2002ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 'வாசகர் திருமுகம்' பகுதியில் மாசுவன் க.நடேசலிங்கம் தெரிவித்த கருத்திற்கு எமது நீர்வேலி ப.நோ.கூ சங்கம் சரியான நிலைப்பாட்டை வாசகர்களுக்குத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளது.

எமது சங்கத்திற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 2002 ஜனவரி மாதத்திற்கு 49,500 லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட்டது. இதில் வீட்டுப்பாவனைக்கு 31,006 லீற்றரும் விவசாயிகளுக்கு 18,839 லீற்றரும் கிளைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டது.

15.01.2002இல் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு அமைவாகவே ஜனவரி மாத விநியோகம் 02.01.2002ன் சுற்றறிக்கை மூலம் 3 லீற்றரும் 23.01.2002 சுற்றறிக்கை மூலம் 1 லீற்றரும் மொத்தம் 4 லீற்றர் விநியோகம் செய்வதற்கு 31,006 லீற்றர் வழங்கப்பட்டது.

விவசாயிகளுக்கு வழங்குவதற்காக உரும்பிராய், புத்தூர் கமநல கேந்திர நிலையங்களினால் 2,112 விவசாயிகளுக்கு 22,924 லீற்றர் சிபார்சு செய்யப்பட்டதற்கு அமைவாக 25.01.2002 சுற்றறிக்கையின் பிரகாரம் 18,839 லீற்றர் விகிதாசாரப்படியும் முன்னுரிமைப்படியும் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பூரணமாக தை மாத விநியோகத்திற்கு வழங்குவதற்கு இன்னும் 4,085 லீற்றர் தேவையாகும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் வழங்குவதற்கான ஒரு மாதத்திற்குரிய மண்எண்ணெயை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதனைக் கையாள்வதிலுள்ள வசதிக்குறைவுகள் காரணமாக பகுதி பகுதியாகவே எமக்கு வழங்குகிறது. இதனால் யாழ்.செயலகத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் மண்எண்ணெய் விநியோகம் கடந்த மாதத்தில் இரு தடவைகளாக நுகர்வோருக்கு தலா 4 லீற்றர் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக 2000ஆம் ஆண்டு மே மாதத்திலும் பெற்றோலுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது என வாசகர் திருமுகத்தில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அக்காலகட்டத்தில் பத்திரிகை ஒன்றில் (உதயன் அல்ல) வெளிவந்த செய்தி தவறானது என்பதை அப்பொழுதே அப்பத்திரிகை மூலம் வெளிப்படுத்தி இருந்ததோடு எமது நிலைப்பாடு உண்மையானது என்பதை கூட்டுறவுத்திணைக்களமும் உறுதி செய்திருந்தது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படியான திருமுகத்தை எழுதுபவர்கள் அதிலும் எமது சங்க எல்லைக்குட்பட்டவர்களாக இருப்பவர்கள் தங்கள் சந்தேகங்களை எம்மிடம் நேரடியாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்வதில் எதுவித சிரமும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நீர்வேலி.* வலி.கி.தெ.ப.நோ.கூ.சங்கம்.

# கார் வெடித்துச் சிதறியதில் 2 பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

## இஸ்ரேலிய நகரில் சம்பவம்

டெல்அவிவ்,பெப்.10

வடக்கு இஸ்ரேலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கார் ஒன்று சிக்கிச் சிதறியது. அந்தக்காரில் பயணம் செய்த இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் மேற்குக்கரை எல்லைப்புறப் பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

காரில் வந்தவர்கள் பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலாளிகள் என்றும் -

வெடி குண்டுகள் பொருத்தப்பட்ட அந்தக் காரில், அருகில் உள்ள இஸ்ரேலிய நகரின் மீது தாக்குதல் நடத்த வந்தபோதே, கார் வெடித்துச் சிதறியதாகவும் -

இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.



மேற்குக்கரையின் நப்லஸ் நகரில் புல்டோஸர், டாங்கிகளுடன் இஸ்ரேலியப் படையினர்.

அதே தினத்தன்று காலையில் முகமூடியணிந்த நான்கு பலஸ்தீனர்கள் கத்திகள் மற்றும் கண்ணீர்ப் புகைகுண்டுகள் கொண்டு நடத்திய தாக்குதலில் யூதப் பெண்மணி ஒருவர் உயிரிழந்தார். தாக்குதல் நடத்திய நால்வரில் 14வயதான சிறுவனைத் தாம் சுட்டுக் கொன்றதுடன் மற்றைய மூவரையும் கைது செய்ததாக இஸ்ரேலியப் பொலீஸார் கூறினர்.

இதற்கிடையில், மேற்குக்கரை நகரான நப்லஸில் இஸ்ரேலிய இராணுவம் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தியது. அங்கு பலஸ்தீனத் தீவிரவாதிகள் மூவர் கைது செய்யப்பட்டனர். இரு டாங்கிகள் மற்றும் ஒரு 'புல்டோஸர்' ஆகியவற்றுடன் அப்பகுதியைச் சுற்றிவளைத்த இஸ்ரேலியப் படையினர் சிறுகுன்றின் மீது, அப்பிரதேசம் முழுவதையும் கண்காணிக்கும் வகையில் அமைந்திருந்த கட்டடத்தை தம்வசப்படுத்தினர். அந்தக் கட்டடத்தில் வசித்த 3 பலஸ்தீனக் குடும்பத்தவர்களும் கட்டாயத்தின் பேரில் வெளியேற்றப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அமெரிக்காவில் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை சமீபத்தில் சந்தித்துப் பேசிய பின்னர் மேற்குக்கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலிய பலஸ்தீன மோதல்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஓ)

# ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட ஸ்பானிய மதகுருவுக்குத் தண்டனை

## கேளிக்கை அமைப்புகள் எதிர்ப்பு

பௌமோ,பெப்.10

ஸ்பெயினில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டதாகப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த கிறிஸ்தவ மதகுரு திருச்சபையிலிருந்து வெளியேற்றப் பட்டார்.

அருட்தந்தை ஜோஸ் மண்ரெரோ (வயது 39) என்பவர் 'ஜீரோ' என்ற ஸ்பானியக் கேளிக்கைப் பத்திரிகைக்குத் தானாக முன்வந்து வழங்கிய பேட்டியில் தனக்கு ஓரினச் சேர்க்கைப் பழக்கமுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இந்தப்பேட்டி வெளிவந்தவுடன் அவர் தேவாலயப் பணியிலிருந்து ஆயரால் அகற்றப்பட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள 'ஜீரோ' பத்திரிகையும், ஸ்பானிய கேளிக்கை அமைப்புகளும், கிறிஸ்தவர்கள் தத்தமது பங்குச் சபைகளிலிருந்து வெளியேறி, அருட்தந்தை மண்ரெரோ தேவாலயப் பணியில் மீண்டும் சேர்க்கப்படவேண்டும் என்று போராடும்படி அழைப்பு விடுத்துள்ளது. மண்ரெரோ மீதான தண்டனை விலக்கப் படாவிட்டால் ஓரினச்சேர்க்கைப் பழக்கமுள்ள 3ஆயர்களின் பெயர்களை ஆதாரங்களுடன் வெளியிடப் போவதாக கேளிக்கை அமைப்புகளின் தலைவர் கார்லோஸ் அல்பேர்டோ பியாண்டிகோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்பெயினில் ஓரினச் சேர்க்கை பரவலாக அங்கீகரிக்கப்பட்டபோதும், அங்கு செல்வாக்குடைய கிறிஸ்தவ திருச்சபை அதனை கடுமையாகக் கண்டித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஆப்கானிஸ்தானில் 'ஐக்கிய உதைபந்தாட்டம்'

காபூல்,பெப்,10

ஆப்கானிஸ்தானில் 'ஐக்கிய உதைபந்தாட்டப் போட்டி ஒன்றுக்கு பிரிட்டிஷ் அரசு ஏற்பாடு செய்துள்ளது. அமைதி காக்கும் படையினரின் அணிக்கும் ஆப்கானியர்களைக் கொண்ட காபூல் அணிக்கும் இடையே இந்தப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய போட்டிகள் ஆப்கானியர்களுக்கும் அங்குள்ள அமெரிக்க பிரிட்டிஷ் படையினருக்கும் இடையே சகஜ நிலையைத் தோற்றுவிக்கும் என்று நம்புவதாக ஆப்கானுக்கான பிரிட்டிஷ் பிரதிநிதி தெரிவித்தார். (ஓ)




பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடிக்கொண்ட 50ஆவது ஆண்டு நிறைவுநாள் கடந்த புதன்கிழமை விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அன்று பாரம்பரிய நிகழ்ச்சிகளைத் தவிர்த்துவிட்டு மகாராணி புற்றுநோய் மருத்துவமனைக்கு விஜயம் செய்தபோது எடுத்த படம்.

# தாய்வானை அதிரவைத்துள்ள பாலியல் ஒளிநாடா விவகாரம்

தைபே,பெப்.10

தாய்வான் தலைநகர் தைபேயில் நகராட்சி மன்றத்தின் பெண் உறுப்பினர் ஒருவர் தொடர்பான பாலியல் ஒளிநாடாவால் தாய்வான் அதிர்ந்து போயுள்ளது.

செல்வி சூ மே பெங்(வயது36) என்ற அந்தப் பெண் உறுப்பினர் ஏற்கனவே திருமணமான வர்த்தகர் ஒருவருடன் பாலியல் உறவுகொள்வது திருட்டுத்தனமாகப் படம் பிடிக்கப்பட்டு ஒளிநாடா பிரசுரமாக மக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது.

செல்வி பெங் தைபே நகராட்சியின் முன்னாள் உறுப்பினராகவும், கடந்த டிசெம்பரில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் புதிய கட்சியின் வேட்பாளராகவும் இருந்தவர். தாய்வான் மக்களிடம் அவருக்கு செல்வாக்கு அதிகரித்து வந்தது. இந்த நிலையில் அவர் சம்பந்தப்பட்ட பாலியல் ஒளிநாடா வெளியானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேசமயம் இந்த விவகாரம் தொடர்பாக பதினொரு பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. செல்வி பெங்கின் படுக்கையறையைப் படம் பிடிப்பதை அவரது நெருங்கிய தோழி என்று கூறப்படும் குயு யு லிங் என்பவரே ஒருங்கிணைத்ததாகவும் -

செல்வி பெங்கின் முன்னாள் நண்பரும், ஹிசின்சு நகர முன்னாள் மேயருமான ற்சை ஜென் சின் என்பவர் பணம் உட்பட அனைத்து உதவிகளையும் இந்தப் படப்பிடிப்புக்கு வழங்கியதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் தற்போது கைது செய்யப்பட்டு வழக்கை எதிர்கொண்டுள்ளனர்.



செல்வி சூ மே பெங்

செல்வி பெங் தன்னை விட்டுப் பிரிந்ததால் ஜென்சின் அவர் மீது கோபம் கொண்டிருந்தார். அதே போன்று செல்வி பெங் மீது அவரது தோழியான யு லிங்கும் பொறாமை கொண்டிருந்தார். ஆகவே அவர்கள் இருவரும் இணைந்து இந்தச் செயலைச் செய்துள்ளனர் என்று நீதிமன்றத்தில் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவருடன் படப்பிடிப்புக்கு உதவியவர்கள், படுக்கையறைக் காட்சிகளை வெளியிட்ட ஒளிநாடாப் பத்திரிகை நிறுவன வெளியீட்டாளர்கள் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பொது ஒழுக்கத்தை குலைக்கும் வகையில் திருட்டுத்தனமாக காட்சிகளைப் படம்பிடித்து வெளிட்டதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக செல்வி பெங் கருத்து வெளியிடுகையில் -

தாய்வானிய சமூகம் என்னை ஏற்றுக்கொள்ளும் ஏனெனில் மக்களுக்கு மேலும் நல்லமுறையில் எனது பணிகளை தொடரப் போகின்றேன் என்று தெரிவித்தார். (ஓ)

# ஆப்கானில் பனிப்பாறைச் சரிவு ; நூற்றுக்கணக்கானோர் பலி?

காபூல்,பெப்,10

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த பாரிய பனிச்சரிவில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இதில் உயிரிழந்த மூவரின் சடலங்கள் மீட்கப் பட்டன.

வடக்கு மற்றும் தெற்கு ஆப்கானிஸ்தானை இணைக்கும் 'சலாங்' குகைப் பாதையினருகே இந்தப் பனிச்சரிவு ஏற்பட்டது.

குகைப் பாதையின் வெளியே சுமார் 20 முதல் 40 கார்கள் வரை பனிப் பாறைகளால் மூடப்பட்டுள்ளதாகவும் -

அந்தக் கார்களில் உள்ளவர்களை மீட்கும் பணியில் அமெரிக்கப் படையினர் உட்பட மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதாகவும் -

ஐ.நா.பேச்சாளர் ஒருவர் காபூலில் தெரிவித்தார்.

சீரற்ற கால நிலையாலும், குகைப் பாதையை சூழவுள்ள இடங்களில் பனி அகற்றும் இயந்திரங்கள் ஏதுவும் இல்லாததாலும், மீட்புப் பணிகள் தடைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உலகில் மிக உயரத்தில் 'சலாவ' குகைப் பாதை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# 'லொக்கர் பீ' குற்றவாளியின் மேன்முறையீட்டு விசாரணை

## நெதர்லாந்து நீதிமன்றத்தில்

'லொக்கர்பீ' விமானக்குண்டு வெடிப்பு வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட லிபிய பிரஜையான, அலி மொஹமட் அல்மெஹ்ராகி சமர்ப்பித்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நெதர்லாந்து நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வில் ஆரம்பித்துள்ளது.

இதில் மனுதாரர் சார்பில் புதிய சாட்சிகளை விசாரிக்க நீதிபதிகள் அனுமதித்தனர். இதனையடுத்து, பிரிட்டன் ஹீத்ரு விமான நிலைய முன்னாள் பாதுகாப்பு அதிகாரி ரேமான்லி சாட்சியாக அழைக்கப்பட்டார்.

விமானம் வெடித்துசிதறுவதற்கு 18 மணித்தியாலங்களுக்கு முன்னர் பிரிட்டனின் ஹீத்ரூவில் பயணிகளின் பொதிகள் ஏற்றப்பட்டதாக ரோமான்லி தெரிவித்தா.

மால்டா தீவில் வைத்தே விமானத்தில் வெடிகுண்டு உள்ள பொதி ஏற்றப்பட்டது என்று முன்னர் அமெரிக்க அரசுதரப்பு வாதிட்டது மால்டாதீவில் மெஹ்ராகி உடைகள் வாங்கியதாக துணிக்கடை உரிமையாளர் ஒருவர் சாட்சியமளித்திருந்தார். அந்த உடைகள் விமானத்தில் குண்டு வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் பெட்டியில் காணப்பட்டதாகவும் நிரூபிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே மெஹ்ராகி குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

ஆனால் தற்போது மேல்முறையீட்டில் விமானத்தில் பிரிட்டனில் வைத்தே பொதிகள் ஏற்றப்பட்டதாகக் ,கூறப்பட்டிருப்பதும் -

மால்டாவில் உடை வாங்கியவர் மெஹ்ராகிதான் என்பதை வெறும் தோற்றத்தை வைத்து மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மனுதாரர்தரப்பில் வாதிடப்படுவதும் -

மெஹ்ராகிக்கு சாதகமான நிலையை தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

1988ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி பிரிட்டனில் இருந்து அமெரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்த அமெரிக்க 'பான்அம்' விமானம் அயர்லாந்தின் 'லொக்கர் பீ' கிராமத்திற்கு மேல் பறந்தபோது வெடித்துச் சிதறியது இதில் 270 பேர் இறந்தனர். இது தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மெஹ்ராகிக்கு கடந்த ஜனவரி மாதம் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு விசாரணையின் முடிவில் மெஹ்ராகி விடுதலை செய்யப்பட்டால், லிபியாவின் பரிகாசக் கண்டனத்துக்கு அமெரிக்கா ஆளாகவேண்டியிருக்கும் என்று கருதப்படுகிறது. (ஓ)

உலக அரங்கில்

# தலிபான் வெளியுறவு அமைச்சர் ஆப்கான் அதிகாரிகளிடம் சரண்!

காபூல்,பெப்.10

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சிக் காலத்தில் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவிவகித்த வாகில் அஹமட் முக்டவாகில் சரணடைந்துள்ளார்.

தெற்கு ஆப்கானிய இடமொன்றில் அமெரிக்கப் படையினரின் விசாரணைகளை முக்டவாகில் எதிர்கொண்டிருப்பதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலிபான்களின் வலுக்கோட்டையாக விளங்கிய கந்தகாரின் தற்போதைய ஆளுநரான நொரஜையிடம் முக்டவாகில் சரணடைந்ததாகவும்-

பின்னர் அவர் அமெரிக்கப் படையிடம் கையளிக்கப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

தலைமறைவாகியுள்ள தலிபான் தலைவர் முல்லா மொஹமட் ஓமருக்கு மிகவும் நெருக்கமானவர் என்று கருதப்படும் முக்டவாகிலே அமெரிக்கப் படையினரின் வசம் உள்ள தலிபான் முக்கியஸ்தர்களில் உயர்தரத்தில் உள்ளவராவார்.



வாகில் அஹமட் முக்டவாகில்

தலிபான்கள் மற்றும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா ஆகியவற்றைப் பற்றிய முக்கிய தகவல்களை அவர் தெரிவிப்பார் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்கப் படையின் பேச்சாளர் மேஜர் பிரட் லோவெல் நம்பிக்கை வெளியிட்டார்.

தலிபான் அமைப்பில், பின்லேடன் உட்பட அரபுத் தீவிரவாதிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதாக முக்டவாகில் குரல் எழுப்பி வந்தவர் என்றும் - ஆகவே, தலிபான் மற்றும் அல்கெய்டாவின் உயர்மட்டத் தலைவர்கள் அவருடன் முக்கிய தகவல்களைப் பகிர்ந்துகொண்டிருக்கமுடியாதென்றும் -

ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆகவே அவரிடமிருந்து உபயோகமான தகவல்கள் ஏதும் அமெரிக்காவுக்குக் கிடைக்கப்போவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஓ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 28 வயது (மிருகசீரிடம் முதலாம் பாதம்), லண்டன் வதிவிட உரிமையுள்ள, COMPUTER ENGINEER இற்கு 25 வயதுக்குட்பட்ட, அழகிய, பட்டதாரிப் பெண் தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு: விள.இல. 1454, மே/பா. உதயன். (434)

1970இல் பிறந்த, சுவிஸ்நாட்டில் நிரந்தர பிரஜாவுரிமைபெற்ற, லக்கினத்தில் செவ்வாய்க் குற்றமுள்ள, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த, படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: K.குமாரதாஸன், நீலர்வளவு லேன், தும்பளை, பருத்தித்துறை. T.P.: 070-212247 (501)

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (516)

பட்டதாரி ஆசிரியை ஒருவருக்கு சாப்பாட்டு வசதியுடனோ அல்லது இல்லாமலோ அறை வாடகைக்கு உடன் தேவை தொடர் விளம்பர இல.1456 மே/பா, உதயன். (527)

## தவறிவிட்டது

மடத்துப் பிள்ளையார் கோயிலடி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி பாலகௌரி பாலசுப்பிரமணியம் என்பவரின் தே. அ.அ. (இல.707492023V) சங்கானைக்கும் காரைநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (487)

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம்வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவில் இருந்து கற்பிக்கப்படும். O/L, 10,9,8,7,6. இல. 8, பிளர்ச்சஸ ஒழுங்கை, சுண்டிக்குளி. (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.) (C/20657)

வகுப்பு 8 - 11 வரை ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்கள் அனுபவம்மிக்க ஆசிரியரினால் கற்பிக்கப்படும் தனி யாகவோ, குழுக்களாகவோ தபால் மூலமோ நேரிலோ பயின்று கொள்ளலாம். தொடர்பு:- விளம்பர இல.1457, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (529)

## FOR SALE

PIONEER STEREO AMPLIFIER A-300R (55 + 55W) EQUALIZER GR 333 C.D PLAYER PD 204 A.PAIR OF BOXES PIONEER 130W (JAPAN) A.PAIR OF BOXES PYRAMID (COLOMBO) ARE FOR SALE CONTACT NO.141, KERNYIYADY, THIRUNELVELY. (483)

## திருமண சேவை

மணமகன், மணமகள் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. சுவாமியார் இராஜகுலசிங்கம் அவர்களது மறைவுக்குப் பின்னர் 6மாத இடைவெளியில் மீண்டும் விநாயகர் திருமண சேவை இயங்கத் தொடங்கி உள்ளது. தொடர்பு: திருமதி இராஜகுலசிங்கம், 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (524)

## விற்பனைக்கு

நல்லின Dashound நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (340)

நல்லின 9 மாதம் நிரம்பிய DASHOUND ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 70 (34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (453)

2002 ஆண்டுக்கான கலண்டர்கள் மிகமலிவு விலையில் விற்பனையாகின்றன. பாடல்கள் பதிவு செய்யப்பட்ட இசைத்தட்டுகளும் (CD) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கேணியடி, திருநெல்வேலி.(482)

18/1, கலைப்புலவர் வீதியில் உள்ள ஒரு பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (மேல் மாடி கட்டுவதற்கு பிளாற் போடப்பட்டுள்ளது). தொடர்பு: எஸ்.சொல்வேந்தன், 77, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (443)

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூரில் 1 1/2 பரப்பு 2 3/4 குளி காணி கடை அறையுடனும் (சகல வசதிகளும் கொண்ட) வீடு உடன் விற்பனைக்கு உண்டு. (தரகர்கள் தேவையில்லை) தொடர்பு: துரசிங்கம் ரவீந்திரன், 70, சட்டநாதர் வீதி, நல்லூர். (474)

SESIL குளிர்சாதனப் பெட்டி C50 Self Start ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 29/1, கடையிற்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (499)

தனிப்பாவனையிலிருந்த HONDA CD 50 மோட்டார்சைக்கிள், மாம்பலகைகள், HERO HONDA (Brown) மோட்டார் சைக்கிள், வீடியோ கமரா, Fax மெசின், ஆட்டுக்கடா (யமுனா பாரி) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.குமணன், "நமிலாஸ்", நெல்லண்டை, பருத்தித்துறை.
T.P.: 070-212247 (502)

குஞ்சுகள், கம்போரா அம்மை, றணிக்கற் பூச்சிமருந்து கொடுக்கப்பட்டவை. தொடர்பு: 105, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். (வீரகேசரி அலுவலகத்திற்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில்). (521)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (339)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. (பாதிக் கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வெ.சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்ச்சந்தி. (469)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து 1/2 கிலோவில் இருந்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 227, பிறவுண் வீதி (நரிக் குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (484)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சனி,ஞாயிறு தினங்களில் வேண்டிய நிறைகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 85, செம்மணி வீதி, (கல்வித் திணைக்களம் அருகில்) நல்லூர். (481)

இறைச்சிக்கோழி (BROILERS), கல்லேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (465)

புறொயிலர், கல்லேட்ஸ் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி.
T.P.No.3529, 2867. (526)

ஒருகைப் பாவனையிலுள்ள GENERAL T.V.14" (கலர் ஜப்பான்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இல.22, மருதடி வீதி, யாழ்ப்பாணம் (ICRC அருகில்) (532)

---

### கோப்பாய் தெற்கு (இருபாலை) கற்பக விநாயகர் ஆலயத் திருப்பணிச்சபை பொதுக்கூட்டம்

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் (2002. 02. 24) ஞாயிற்றுக்கிழமையன்று காலை 10. 00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

வழக்கமான பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளுடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும். அடியார்கள் அனைவரும் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர். (517) தலைவர்.

---

## கண்ணீர் அஞ்சலி



எம் இனிய நண்பன்
**கனகசூரியர் ஜெயசூரியர்**
(சூரியண்ணை)

காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடையும் இவ்வேளையில், அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சதாஸ் மோட்டோர்ஸ்,
ஜெகன் போட்டோ,
நல்லைக்குமரன்.

*யாழ்ப்பாணம்.* (C/20670)

---

## கண்ணீரப் பூக்களின் காணிக்கை



**அமரர் கனகசூரியர் ஜெயசூரியர்**
(முன்னாள் மனேஜர், பெனின்சுலா குறூப்;
சிவலோகநாதன் பிறதர்ஸ்)

அவர்களின் மறைவையிட்டு நாம் மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீரப் பூக்களைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெற மருதடி விநாயகரை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மானிப்பாய்.* (523) - நண்பர்கள்

---


## நிப்பொன் (NIPPON)
### மின் சிக்கன மின் குமிழ்கள்

நாடளாவிய ரீதியில் பிரசித்தி பெற்றது




கலர் பல்புகளும் உண்டு
16 க்குமேற்பட்ட வகைகள்

மோட்றோல்லா றான்சிஸ்டர் THERMAL FUSE

**LANKA NIPPON**
No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar), BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


---

## தேவை

பிறவுன் அன் கொம்பனி நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாய வியாபார நோக்குடைய வீட்டுத் தோட்டங்களுக்கு வேண்டிய செயன்முறைகளில் முன்னோடிகள் நாங்கள். றெயின்பேட் அமெரிக்கா ஸ்தாபனத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். நாங்கள் யாழ்ப்பாணத்தில் எங்கள் பிரதிநிதியாகச் (FREE LANCE) செயற்பட்டு நீர்ப்பாசனத் திட்டங்களை விற்பனை செய்வதற்கும், செயற்படுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவரிடம் விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம். இதற்குரிய பயிற்சியையும் வழிகாட்டலையும் நாங்களே வழங்குவோம்.

நியமனம்:- **FREE LANCE TECHNICAL OFFICER**

விண்ணப்பிப்போர் முதலில் கொழும்பு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை உறுதிப்படுத்திக்கொண்டபின், யாழ்ப்பாணத்தில் தொலைபேசி இல.021-2605இற்கு தொடர்பு கொள்ளவும். நேர்முகப் பரீட்சை மாசி மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் Bastian Hotel இல் நடைபெறும்.

டிறெக்டர் விவசாயப்பிரிவு
*பிறவுன் அன் கொம்பனி*
*75,தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை,*
*கொழும்பு-10.*

தொலைபேசி:-
01-693097, 695238, 674332.
Fax:- 01-688853, 692814. (C-20628)

---

## கண்ணீர் அஞ்சலி

**கனகசூரியர் ஜெயசூரியர்**
*(முகாமையாளர், சிவலோகநாதன் அன் கம்பனி)*

கலகலப்பான உம் கதைகளினால்
கவலையின்றி நாமிருந்தோம்
சலனமின்றி நீர் போனதனால்
சஞ்சலத்தில் நாம்.......!

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அமரரின் ஆத்மா சாந்தி அடைவதாக!*

சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (519)

முகாமையாளர்,
உத்தியோகத்தர்கள்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்ட
யாழ்.மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தின் அதிபர்
**திரு.ச.ஞானலிங்கம்**
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி சபாரத்தினம் மகேஸ்வரி**

அவர்களின் மறைவையொட்டிய இன்றைய 31ஆம் நாளில் அவரது நினைவாக அஞ்சலியைச் சமர்ப்பித்து, அவரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
(522) யாழ்.அராலி சரஸ்வதி ம.வி., அராலி.

---

## மரண அறிவித்தல்

**மார்க்கண்டு கமலசேகரம்** (போட்டியண்ணை)

சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு கமலசேகரம் கிளிநொச்சி, வன்னேரியில் நேற்றுமுன்தினம் (08.02.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - இரத்தினம் தம்பதியினரின் மகனும் கந்தசாமி - காலஞ்சென்ற பராசக்தியின் மருமகனும் மகேஸ்வரியின் கணவரும் சந்திரகலா (சித்திரா-சுவிஸ்), சசிகலா (வன்னி), சுகுமார் (ஜேர்மனி), சந்திரகுமார் (வன்னி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னேஸ்வரன் (சுவிஸ்), விஜயகுமார் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டக்களப்பு) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னியில் நேற்று (09.02.2002) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கமலவாசம்'*
*சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.*

தகவல்:
மா.இந்திரன் (சகோதரன்) (518)

உதயன்

## ஒத்தியங்குவது சாத்தியமா?

ஐக்கிய தேசிய முன்னணி புதிய அரசை அமைத்ததை அடுத்து இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வுகாணும் முயற்சிகளில் புதிய ஆர்வமும் நம்பிக்கையும் பிறந்தது வாஸ்தவம்தான்.

என்றாலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும் அரசு பிறிதொரு கட்சியின் பிடியிலும் உள்ளபோது நாட்டின் தலைமைத்துவம் ஒருங்கிணைந்து ஓர் அமைதித் தீர்வைக்கண்டு, அதை நடைமுறைப்படுத்த முன்வருமா என்பது குறித்து பலதரப்பிலும் சந்தேகம் எழுப்பப்பட்டு வருகின்றது.

முழுநாட்டையுமே கடந்த இரண்டு தசாப்த காலமாக உலுக்கிவரும் பெரும் தேசியப் பிரச்சினையான இனப் பூசலுக்கு, நாட்டை ஆண்டுவருகின்ற - ஆளப்போகின்ற - சிங்களப் பெரும்பான்மையினரின் இரண்டு பெரிய கட்சிகளும் இணைந்து ஒரு தீர்வை முன்வைத்தால்தான் அது நடைமுறைக்குச் சாத்தியமானதாக அமையும் என்பது யதார்த்தம்.

ஆட்சியில் இருந்த தனி ஒரு சிங்களக் கட்சியின் தலைமைத்துவத்துடன் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாணும் நோக்கில் காலத்துக்குக்காலம் தமிழ்த் தலைமைத்துவங்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் குப்பைக் கூடைக்குள் போனதற்கு இதுதான் காரணம் என்பது எமது கடந்தகால அனுபவம்.

சிங்களப் பெரும்பான்மையினரின் இரண்டு பெரிய கட்சிகளும் ஒன்று சேர்ந்து தீர்வை முன்வைப்பதற்கான கால கட்டம் இப்போது கிட்டியிருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவர். சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றவரான பிரதமர் மற்றக் கட்சியைச் சேர்ந்தவர். இவர்கள் இருவரினதும் கையில்தான் நாடும், அரசும், அதிகாரமும்.

இந்தச் சந்தர்ப்பத்தை இருவரும் சேர்ந்து சரிவரப் பயன்படுத்தி, நாட்டை யுத்தப் பேரழிவிலிருந்து காப்பாற்றுவார்களா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கான கால்கோள் இடப்பட்டாகிவிட்டது. பேச்சுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

பேச்சுமுயற்சியில் முன்னேற்றம் காணப்பட்டால் ஏதோ ஒரு காலகட்டத்தில் வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டியிருக்கும். அது அனைத்துத் தரப்பும் ஏற்றுக்கொண்ட விடயம்.

"மிகவிரைவில் நாங்கள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்கவிருக்கின்றோம். அதற்கிடையில் வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் இப்போதைக்கு அவசியமா? நமது இடைக்கால நிர்வாக நடவடிக்கைகளுக்கு அவை இடைஞ்சலாக அமையுமல்லவா? எனவே நாங்கள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்கும் வரை வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவையுங்கள்!" - என்ற தமது விருப்பத்தை விடுதலைப் புலிகள் நோர்வே ஊடாக இலங்கை அரசுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியிருந்தார்கள்.

இலங்கை அரசும், அதன் தலைவரான பிரதமரும்கூட கொள்கை அளவில் அதனை ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் அதனை நடைமுறையில் செயற்படுத்த முடியாத நிலைமை.

வடக்கு - கிழக்கில் ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுவிட்ட உள்ளூராட்சித் தேர்தலை - புலிகளின் வேண்டுகோளை நிறைவுசெய்வதற்காக - அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதற்கு வசதியாக - ஒத்திவைப்பதாயின் அதற்கான சட்டத் திருத்தத்தைச் செய்ய வேண்டும். அதுவும் அவசர அவசரமாகச் செய்யவேண்டும். அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் வேண்டும்.

ஜனாதிபதி ஒப்புதல் அளிக்க மாட்டார் என்பதால் வேறுவழியை நாடுகின்றார் பிரதமர். நியமனப் பத்திரங்களைத் தாக்கல்செய்து பின்னர் சரியான சட்டம் ஒன்றின்மூலம் ரத்துச்செய்வதற்கும் அவர் முயல்கின்றார்.

அதாவது வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதாகப் புலிகளுக்குச் சமிக்ஞை காட்டிய பின்னரும் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கலாகும்வரை கையைக் கட்டிப் பார்த்திருக்கும் கட்டாயத்தில் பிரதமர் உள்ளார்.

சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமானதாக்கும் ஒரு நடவடிக்கையாக வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டியுள்ளது. அதில்கூட ஜனாதிபதியும் பிரதமரும் ஒத்திசைவாகச் செயற்பட முடியவில்லை. இந்தச் சித்துவத்தில் அமைதித் தீர்வுகாணும் முழு நடவடிக்கையிலும் இவர்கள் ஒத்தியங்கப்போவது எப்படி?

இது "கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன" கதையாகத்தான் முடியும் போலப்படுகின்றது.

# பயபக்தியைப் பரப்பிய ஆலயங்கள் வியாபார நிலையங்கள் ஆகிவிட்டன

## பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வேதனை

யாழ்ப்பாணம்,பெப்.10

முன்னைய காலங்களில் மிகுந்த பயபக்தியோடு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் இடம்பெற்று வந்த ஆலயங்கள் பலவும் இன்று வியாபார நிலையங்கள்போல் செயற்படத் தொடங்கிவிட்டன.

- இவ்வாறு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வேதனை வெளியிட்டுள்ளார்.

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் இடம்பெற்ற திருமுறை விழாவில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆலயங்களில் தற்போது ஆகம விதிமுறைகளோ, பக்தி நெறிமுறையோ பேணப்படுவதாகத் தெரியவில்லை. அர்ச்சகர்களுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும், பக்தர்களுக்கும் இடையே போட்டி, பூசல்கள் காணப்படுகின்றன. இவர்களுக்கு சமய அறிவு போதாது. ஆகவே அவர்களை சமயத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக்க வேண்டும்.

சாஸ்திர அறிவு இல்லையென்றாலும், குறைந்தது பக்தி நெறியாவது உள்ளதா என்று பார்த்தால் அதுவும் கிடையாது.

மக்களை பக்தி நெறிக்கு ஆற்றுப்படுத்தும் பணியில் ஆச்சிரமங்களே உதவுகின்றன. எத்தனையோ துன்பங்களை அனுபவித்துவிட்ட எமது மக்கள் அவற்றிலிருந்து விடுபட ஆன்மீகப் பாதை ஒன்றே வழி. இவ்வாறு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் இந்துசமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் சிறப்புரையாற்றியபோது:

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்வரை மேற்கொள்ளப்படும் எத்தகைய அபிவிருத்தி வேலைகளும் அர்த்தமற்றவையாகவே அமையும். ஆகையால் சமாதானத்தை ஏற்படுத்தும் பணிகளில் மிகுந்த அக்கறையோடு மக்கள் ஈடுபடவேண்டும். உருவாகிவரும சமாதானச் சூழ்நிலையை வளர்ந்தோங்கச்செய்ய ஆன்மீக நிலையங்களிலும் இல்லங்களிலும் பிரார்த்தனைகளில் மக்கள் ஈடுபட வேண்டும் என்று அவர் வேண்டிக் கொண்டார். (ஒ)

## குடாநாட்டிலும் 11 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம்,பெப்.10

54 ஆவது சுதந்திரதினத்தன்று யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தபாரிப்புப்பணம் கட்டத்தவறியதற்காகவும், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்துக்காக குற்றப்பணம் செலுத்தாதற்காகவும் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 11 கைதிகளே சிறைச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டவர்களாவர். (ம-180)

## குழந்தைகளின் போஷாக்கு குறித்து ஆய்வு!

தென்மராட்சி,பெப்.10

பட்டினிக்கு எதிரான இயக்க நிறுவனத்தின் யாழ்மாவட்டத்தில் உள்ள நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் குழந்தைகளின் 'போசாக்குக் குறைபாடுகளும் அதன் விளைவுகளும்' என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் தலா நான்கு குடும்பநல சேவையாளர் பகுதிகளில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாளை இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-117)

## திருடனைக் காட்டிக்கொடுத்த 'உதயன்' பத்திரிகை

தென்மராட்சி,பெப்.10

இராணுவத்தினர்போன்று வேடமிட்டுத் திருடவந்தவர்களின் குட்டை 'உதயன்' பத்திரிகை காட்டிக் கொடுத்ததால் திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பியோடிய சம்பவம் கரவெட்டி யார்க்கருப் பகுதியில் இடம்பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை யார்க்கருப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் இருந்த வீடு ஒன்றுக்கு மழை பெய்து கொண்டிருந்த சமயம் சென்ற சிலர், சிங்களத்தில் உரையாடியவாறு தாம் அந்த வீட்டினைச் சோதனையிடப்போவதாகக் கூறினர். வீட்டுக்காரரும் சோதனையிடுவதற்காகக் கதவுகளைத் திறந்துவிட்டனர்.

வீட்டினுள் நுழைந்த அந்த நபர்கள் அங்கிருந்த 'உதயன்' பத்திரிகையை எடுத்து ஆர்வமாக வாசித்தனர். இதனை அவதானித்த வீட்டு உரிமையாளர்கள் வந்தவர்களுக்கு நன்றாகத் தமிழ் வாசிக்கத் தெரிந்திருக்கிறது. எனவே அவர்கள் திருடர்கள்தான் என்று உணர்ந்து கூக்குரலிட்டனர்.

இதனை அடுத்து வந்தவர்கள் தமது திருட்டு முயற்சியைக் கைவிட்டு தப்பியோடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## யாழ்.பிரதம தபாலகத்துக்கு ரூ. 7கோடி செலவில் கட்டடம்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு 7 கோடி ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது.

யாழ்.முற்றவெளியில் தபாலகம் முன்பு இயங்கிவந்த இடத்திலேயே புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிய கட்டட வேலைகள் முடிவுற சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாகும் என தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது யாழ்.பிரதம தபாலகம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இயங்கிவருவது தெரிந்ததே.(ம-180)

## நாட்டு நடப்பு

### நவயுக ஔவையின் வாழ்த்து

மா உயர பாண் உயரும்
பாண் உயர பசி உயரும்
பசி உயர களவு. உயரும்
களவு உயர கொலை உயரும்
கொலை உயர சிறை உயரும்
சிறை உயர சீர் அழியும்
சீர் அழிய அரசு அழியும்
அரசு அழிய அறம் அழியும்
அறம் அழிய நாம் அழிவோம்.

- *விகடகவி.*

## காணிப்பதிவு அலுவலகத்துக்கு நான்கு மாடிக் கட்டடம் அமைப்பு

யாழ்ப்பாணம்,பெப.10

யாழ்.செயலகத்தில் தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் மாவட்டக் காணிப்பதிவு அலுவலகத்துக்கு செயலக வளாகத்தில் புதிதாக 2 கோடி ரூபா செலவில் நான்குமாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் யாழ்.மத்திய கல்லூரிக்கு அண்மையில் இயங்கி வந்த இந்த அலுவலகம் தற்போது யாழ்.செயலகத்தில் தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

2 கோடி 20 லட்சம் ரூபா செலவில் நடைபெற்றுவரும் இந்தக் கட்டட வேலைகள் தற்போது பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. எதிர்வரும் மே மாதம் அளவில் வேலைகள் அனைத்தும் பூர்த்தி அடைந்துவிடும் என்று கட்டடத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-180)

## இளவாலைப் பகுதி வீதிகளை இராணுவம் திறந்துவிட்டது

யாழ்ப்பாணம்,பெப்.10

இளவாலை கவுணாவத்தைப் பகுதியூடாகக் கருகம்பனை செல்லும வீதிகளை மீண்டும் திறந்துவிட இராணுவத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தமது இராணுவ முன்னரங்க நிலைகளை விஸ்தரிக்கும் பொருட்டு கடந்த இருமாதங்களாக இப்பகுதியூடான போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

இவ்விஸ்தரிப்பு காரணமாக மயிலங்கூடல் அன்னைவேளாங்கன்னி ஆலயத்துக்கு அருகாகச் செல்லும் வீதிகள் மூடப்பட்டிருந்தன.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி ஸ்ரீபாஸ்கரன் இது குறித்து பலாலி படைத்தளபதிகளுடன் மேற்கொண்ட பேச்சுக்களை அடுத்து இவ்வீதிகளைத் திறந்து பொதுமக்கள் பாவனைக்குவிடுவதற்கு இராணுவத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

விஸ்தரிக்கப்பட்ட இராணுவ முன்னரங்க நிலைகளும் முன்னர் இருந்த இடங்களுக்கு இராணுவத்தினரால் மாற்றப்பட்டுள்ளது. (ம-8)

### 18 ஆம் திகதிமுதல்

## கப்பல் ரிக்கெற் பெறுவதில் புதிய நடைமுறைகள்

திருகோணமலை,பெப்.10

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவைக்கு பயணச்சீட்டு வழங்கும் நடைமுறையில் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் மாற்றம் செய்யப்படவுள்ளது.

பயணம் செய்வதற்கு ஐந்து நாளகளுக்கு முன்னர் பயணச்சீட்டினை பெற்றுக்கொள்ளலாம் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைகளில் திருகோணமலையில் இருந்து பயணம் செய்ய விரும்புவோர் அதற்கு முந்திய திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளிலும், புதன்கிழமைகளில் பயணம் செய்ய விரும்புவோர் அதற்கு முந்திய புதன் மற்றும் வியாழக்கிழமைகளிலும் பயணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

காலை 9 மணிமுதல் 12 மணி வரையும் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 4.30 மணிவரையும் இனி பயணச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பயணம் செய்பவர்கள் நேரில் சென்று பயணச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதி, விண்ணப்பித்த நான்கு நாள்களில் கிடைக்கக் கூடிய ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக 'சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் முகவர் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10)


## சந்ததிக்காய் சிந்தியுங்கள்!

துன்புறுத்தல்களாலும், துஷ்பிரயோகங்களாலும் துண்டாடப்படுகின்ற எமது வாழ்க்கை இனியும்... இருண்டுவிட அனுமதிக்கலாகாது. இது எமக்குரிய காலம்!

பெரியோரே....

சிறுவர் துஷ்பிரயோகங்களின்மூலம் நீங்கள் சம்பாதித்துக்கொள்வது "ஆரோக்கியமற்ற உங்கள் சந்ததியைத்தான்" எனத் தெரிந்துகொள்ளுங்கள். எங்களை இம்சிப்பதாலும் எம் உரிமைகளைப் பறித்தெடுப்பதாலும் உங்களுக்குக் கிடைக்கப்போவது வலுவற்ற பரம்பரையும் உங்களை 'எதிர்க்கும் நாங்களும்' தான்!!

ஆகவே... சிறுவர்களை...

அரவணையுங்கள்! அன்பு செய்யுங்கள்!! உற்சாகமூட்டுங்கள்!!! உரிமை கொடுங்கள்!!!!



"சிறுவர்களின் வளர்ச்சி - அது உலகத்தின் உயர்ச்சி."

- ரீ.ரீ.மயூரன்
(மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு)

(C/20661)

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய தகவல்களைத் தெரியப்படுத்தவேண்டிய முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
☎ 021-2261 EXT 274

சிறுவர் பாதுகாப்பு (ஐ-இ.) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு.


### உதயவாக்கு

ஒரு மனிதனின் உரையாடல் அவனுடைய எண்ணங்களின் கண்ணாடியாகும்.

### நாளை

தை 29
திங்கட்கிழமை
(11-02-2002)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.54 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
பின்னிரவு 1.19வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 12.34 - 2.04
ராகுகாலம் : 8.04 - 9.34
(பழைய நேரப்படி)

உ

மங்களகரமான

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் தைத்திங்கள் 28ஆம் நாள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிமுதல் 8.30 மணிவரைவரும் சுபமுகூர்த்த நல்வேளையில்,

### லஷ்மி ரேட் சென்ரர்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தவிரும்புவதால் விழாவுக்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகி

"லஷ்மி வாசா"
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

திரு.க.நாகேந்திரா குடும்பத்தினர்.

(401)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 - 03 - 1929 | | 11 - 01 - 2002 |

### தம்பு பரராஜசிங்கம் (உடுவில்)

*அன்பு அப்பா!*

இன்சொல்லும் ஏற்றமுறுஞ் செயலும்
எவர்க்கும் உதவும் இளகிய நெஞ்சும்
உங்கள் அணிகலன்கள்!
உங்கள் இழப்பு மிகக் கொடியது!
எனினும் -
எங்கள் வீட்டின் ஒவ்வொரு அசைவிலும்
உயிர்ப்புடன் நீங்கள் வாழ்கிறீர்கள்.
உன்னதமான உங்கள் நினைவுகள்
என்றும் எமக்கு வழிகாட்டும்.

*டச் றோட்,*
*உடுவில்.*

நீங்கா நினைவுடன்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-20658)

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(அப்புத்துரை)

அராலி கிழக்கு

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29.05.1908 | 23.01.2001 |

திதி: 10.02.2002

அன்பின் அப்பாவே! அழவைத்து
போனது ஏன் அப்பா! ஆண்டொன்று
போனதே அப்பா! ஊர் மெச்ச
வாழ்ந்த நீங்கள் சொல்லாமல்
கொள்ளாமல் போனதெங்கே?

*எம் உயிரோடு கலந்துவிட்ட எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அராலி அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்.*

*'கலாபவனம்'*
*வீரபத்திரகோயில் தெற்கு,*
*உடுப்பிட்டி.*

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(435)

## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.10

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை நக்கா வீதியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, பாதுகாவலர் சங்கத்திற்கு அளித்த வாக்குறுதி தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் -

எனவே சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும், யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க-9)

## பிரிவுபசார விழா

வடமராட்சி கிழக்கு,பெப்.10

கரவெட்டி கல்விக்கோட்டத்தில் இருந்து இளைப்பாறிய மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர்களுக்கான பிரிவுபசார விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி கல்விக்கோட்ட அதிபர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ் விழா நடைபெறவுள்ளது. (க-182)

## வரணி ம.வித்தியாலய மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,பெப்.10

வரணி மகா வித்தியாலயத்தில் 2001ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. (சாதாரண), ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைகளுக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களையும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலயத்துக்கு தவறாது சமுகமளிக்கும்படி அதிபர் ந. நவரத்தினராசா கேட்டுள்ளார். (ஓ)

## 'நாரந்தனைத் தாக்குதல்' வழக்கு விசாரணை; சாட்சி தடுமாற்றம்!

யாழ்ப்பாணம்,பெப்.10

'நாரந்தனைத் தாக்குதல்' சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினமும் யாழ்.நீதிமன்றில் இடம்பெற்றது.

அப்போது ரெலோ உறுப்பினரான அன்ரன் யோகராஜா அருளானந்தன் என்பவரின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்ட சமயம் குறிப்பிட்ட சாட்சி முன்னுக்குப்பின் முரணாகவும், தடுமாற்றமாகவும் வாக்குமூலம் அளித்ததை அடுத்து அவரை சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைக்கு உட்படுத்தி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸாரைப் பணித்த நீதிவான் வழக்கை நாளை திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்தார். (ஓ-10)

## திருமுறைப் பாராயணம்

மீசாலை, மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரு திருமுறைப் பாராயணம் இடம்பெறவுள்ளது. (ம-10)


## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

### VANIY INN லொட்ஜ்

சகலவசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையுரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒருமுறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo- 13. T.P.No. 01 433182, 472582.

(95982)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பருத்தித்துறை, வியாபாரிமூலை.

அருள்மிகு பத்திரகாளி சமேத ஸ்ரீ ஆதிசிவ வீரபத்திர சுவாமி தேவஸ்தானம்

மேற்படி ஆலயப் புனரமைப்பு வேலைகளுக்காக ரூபா 400,000 ஒதுக்கீடு செய்து அதில் ரூபா 200,000 உடன் காசோலையாக ஒதுக்கித் தந்தமைக்காக,



முன்னாள் அமைச்சரும் செயலாளர் நாயகமுமாகிய மாண்புமிகு

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு. K.V.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்



பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளருமாகிய

**திரு. ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**

அவர்களையும்

*பாராட்டி எமது உளங்கனிந்த நன்றியுடன் ஊர் மக்களின் சார்பாகவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*வியாபாரிமூலை.* (432) - திருப்பணிச் சபையினர்.

## அபிராமிதாஸ உற்சவம்

யாழ்/வண்ணை/கலட்டி/எச்சாட்டி

### மஹாமாரி அம்மன் கோயில்

நாளை (11.02.2002) திங்கட்கிழமை
அபிராமிதாஸ உற்சவம் நடைபெறும்.
காலை 6.30 மணிக்கு அபிஷேகம், 7.30 மணிக்கு பூசை, மாலை 2.30 மணிக்கு பூசை, 3.00 மணிக்கு அபிராமி அந்தாதி பாடல் ஆரம்பம்



*அபிராமி பாடல் இசைப்பவர்:*
கலைஞானகேசரி மறவனூர்
**T.M. வாசகர்**
(தவில், மிருதங்க, கலைஞர் *உரும்பிராய்*)

மிருதங்கம்:
செல்வன் மாதவன்
கந்தரோடை.

வயலின்
த.சற்குருநாதன்
*மயிலங்காடு*

பிரதம குரு:
தானு/வாசுதேவக்குருக்கள்

ஆலய குரு:
வா.ஜெயவஸ்த்தாங்க சர்மா (412) - உபயகாரர்.

சிவமயம்

## திருமணத் திருமுகம்



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைமாதம் 28ஆம் திகதி இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமையும், கிருஷ்ண பக்ஷம் உத்தராடம் நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று காலை 10.47 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள மேட லக்ன சுபமுகூர்த்தத்தில்,

திரு.திருமதி இரத்தினம் தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன்
**ஜெயபாஸ்கரன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி கணேசன் தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி
**தனுஷா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நீர்கொழும்பு றெயின்போ வரவேற்பு மண்டபத்தில் (இல.3, கறன் பிளேஸ்) திருமாங்கல்ய தாரணம் மங்களகரமாக நடைபெறுகிறது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

றியோ - ஜெயபாஸ்கரன்
"றியோ ஐஸ்கிறீம்", யாழ்ப்பாணம்,
114/1, கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு.

(476)

(திருவீட்டார் அறிவிப்பு)

திரு.திருமதி கணேசன் குடும்பத்தினர்
(நல்லூர், யாழ்ப்பாணம்)
திரு.திருமதி யோகராஜா குடும்பத்தினர்
(பிறின்ஸ் வவுனியா)
47, விவேகானந்தா மேடு, கொழும்பு - 12

யாழ்.ஆஸ்பத்திரியில்

# ஐந்தாவது எக்ஸ்-ரே இயந்திரம் இயங்கத் தயார் நிலையில்!

## ஆனால் தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.போதனா வைத்தியசாலை எக்ஸ்-ரே பிரிவுக்கென கடந்த வருடம கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட புதிய எக்ஸ்-ரே இயந்திரம் பொருத்தப்பட்டு இயங்குவதற்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

நடமாடும் எக்ஸ்-ரே இயந்திரங்கள் இரண்டு உட்பட நான்கு எக்ஸ்-ரே இயந்திரங்களுடன் இயங்கிவந்த எக்ஸ்-ரே பிரிவு, தற்போது 5 இயந்திரங்களுடன் சேவையாற்றும்நிலைக்கு வந்துள்ளது.

இதனால் தற்போது ஓரளவுக்கு போதிய எக்ஸ்-ரே இயந்திரங்கள் இருந்தபோதிலும், தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையினால் எக்ஸ்-ரே பிரிவின் பணியைச் செவ்வனே துரிதமாகச் செய்யமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-15)



'போருட்' நிறுவன உதவியுடன் கரணவாய் தெற்கு செல்வபுரத்தில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் மற்றும் இளங்கோ சனசமூக நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கு அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் அண்மையில் விஜயம் செய்திருந்தனர்.

நோர்வேயைச் சேர்ந்த 'போருட்' நிறுவனச் செயலாளர் நாயகம் ரறியா கெக்னஸ் நிலையத்தை ஏனைய உத்தியோகத்தாகள் சகிதம் பார்வையிட்டபோது எடுக்கப்பட்டபடம். (க-11)

# தென்மராட்சிப் பாடசாலைகளை புனரமைக்க ரூ.65 லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் யுத்தத்தினால் சீரழிந்துள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கென மாகாணக் கல்வி அமைச்சினால் இவ்வருடம் (2002) 64 லட்சத்து 79 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செயயப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டட அபிவிருத்தி வேலைகளுக்கு 25 லட்சம் ரூபாவும், தளபாடக் கொள்வனவுக்கு 16 லட்சத்து 53 ஆயிரத்து 200 ரூபாவும் கணனிகள் கொள்வனவு செய்வதற்கு 3 லட்சதது 10 ஆயிரம் ரூபாவும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 12 லட்சத்து 61 ஆயிரம் ரூபாவும், உபகரணங்கள் பழுதுபார்த்தலுக்கு 7 லட்சத்து 54 ஆயிரத்து 800 ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தென்மராட்சி வலயப் பாடசாலைகளைப் புனரமைக்க 300 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (ம-117)

## விவேகானந்தர் சிலை புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

திருநெல்வேலி, இராமகிருஷ்ணாலயத்தின் விவேகனாந்தர் உருவச் சிலை மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டதை அடுத்து இன்று மாலை 4.30 மணிக்கு மலர் மாலை சூட்டப்படடு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன,

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ருபானந்தாவின் விசேட சொற்பொழிவும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவாகள் உட்பட பலரும் கலந்துகொளளவுள்ளனர் என்று இராமகிருஷ்ணாலயப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துளளார்.இந்த உருவச்சிலைமீது கடந்த மாதம் 25ஆம் திகதி இரவு இனந்தெரியாத விஷமிகள் கல்வீசித் தாக்கியதால் சிலை சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. (ம-10)

## செயலமர்வு

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஆசிரியர் செயலாற்றுகை தரங்கணிப்பு தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் உள்ள தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களை கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## தடைநீக்கம்

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சிக்கு கண்டி வீதி வழியாகச் செல்ல சைக்கிள் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நேற்றுமுதல நீக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டபின்னர் கண்டி வீதியூடாக பஸ் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும், சைக்கிள் பயணிகள் செல்லத்தடைவிதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் முதல் இத்தடை நீக்கப்பட்டு சைக்கிள் பயணிகள் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டதை அடுத்து கணிசமான மக்கள் இப்பாதையூடாக சைக்கிளில் பயணத்தை மேற்கொண்டனர். (ம-15)

முதற்கட்டமாகப் பயிற்சியை முடித்து வெளியேறிய

# அபிவிருத்தித் தொண்டர்களுக்கு நாளை எழுத்துமூலப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.10

கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தித் தொண்டர்களாகப் பயிற்சியை முடித்துக்கொண்ட முதற்கட்ட பயிற்சியாளர்களுக்கான எழுத்துப் பரீட்சை சகல பிரதேச செயலகங்களிலும் நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ளதாக யாழ். செயலக திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இப்பரீட்சைக்கு முதற்கட்டப் பயிற்சியாளர்கள் அனைவரயும் மற்றும் போதனாசிரியர்கள், அபிவிருத்தி பரிசோதகர்களையும் கலந்துகொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

அபிவிருத்தித் தொண்டர்கள் பயிற்சிபெற்ற பிரதேச செயலகப் பிரிவும், அவர்களுக்கான பரீட்சை நடைபெறும் இடம், நேரம் என்பனவும் முறையே வருமாறு:-

★ யாழ்பிரதேச செயலகம்:- யாழ் - சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம் - மாலை 2 மணி.

★ வலி.வடக்குப் பிரதேச செயலகம்:- யாழ்.அருணோதயக் கல்லூரி - மாலை 2 மணி.

★ வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம் (கரவெட்டி):- வடமராட்சி மத்திய மகளிா கல்லூரி - காலை 9 மணி.

★ பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்:- பளை மத்திய கல்லூரி - மாலை 2 மணி.

★ வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகம்:- கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி - மாலை 1.30 மணி.

★ வேலணை பிரதேச செயலகம்:- பிரதேச செயலகம் - காலை 9 மணி.

★ வலி.மேற்குப் பிரதேச செயலகம்:- பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

(ம-9-17-29-117-152-180)

# யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு புதன்முதல் சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான இலவச சீருடைத்துணி விநியோகம் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இதன்படி நல்லூர்க் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த தரம் I ஏ, பி பாடசாலைகளுக்கும், தரம் III பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 13ஆம் திகதியும், தரம் I, சி பாடசாலைகளுக்கும், தரம் II பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 14ஆம் திகதியும் இவை வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் கல்விக்கோட்டப் பாடசாலைகள் அனைத்துக்கும் எதிர்வரும் 15ஆம் திகதியும் -

கோப்பாய்க் கல்விக்கோட்டத்தின் தரம் I ஏ,பி பாடசாலைகளுக்கும், தரம் III பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 18ஆம் திகதியும், தரம் I சி பாடசாலைகளுக்கும், தரம் II பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 19ஆம் திகதியும் சீருடைத்துணிகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட தினங்களில் காலை 9.30 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தின் களஞ்சியப் பொறுப்பாளரிடம் இருந்து சீருடைத்துணியைப் பெற்றுக் கொள்ளுமாறு சகல அதிபர்களையும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

தீவகக் கல்விவலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் நாளையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் தீவகக் கல்விவலயப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தீவகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

வேலணைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு நாளை திங்கட் கிழமையும், ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமையும் பாடநூல்கள் வழங்கப்படவுள்ளன. (ம-10)

## நியமன கடிதங்கள்

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட 32 பேருக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 13ஆம் திகதி புதன் கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில்வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

யாழ்.பல்கலை. ஆசிரியர் போர்வையில் இயங்கும்

# கைக்கூலிக் கும்பல்களின் முகத்திரையை கிழித்தெறியுங்கள் தாயகத் தமிழர்களே!

## கனடாவாழ் தமிழ் மாணவர் அறைகூவல்

ரொரண்ரோ.பெப்.10

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைக் குழு என்ற பெயரில் செயற்படும் கைக்கூலிகளின் முகத்திரையைத் தாயகத்தமிழர்கள் கிழித்தெறியவேண்டும்.

கனடாவாழ் தமிழ்ப் பல்கலைக் கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பு அமைப்பு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுதொடர்பாக 'அன்பான இனப்பற்றுக்கொண்ட தமிழ் மக்களே!' என்ற தலைப்பில் அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கனடாவாழ் தமிழ்ப் பல்கலைக் கழக மாணவர்களாகிய நாங்கள், எமது நீதிக்கான போராட்டக் குரலை அடக்கும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைக்குழு என்ற ஒடுக்குமுறை அரசின் கூலிக் குழுவின் முகத்திரையினை இவ்வுலகிற்கு தெரியப்படுத்துமாறு எமது தாயத்தில் வாழும் தமிழர்களை மிகவும் பணிவன்புடன் இவ்வறிக்கைமூலம் கேட்டுக்கொள்கின்றோம்.

தம்மை அறிவுஜீவிகள் என அடையாளம் காட்டிக்கொண்டு, இந்தக் குழுக்கள் எமது மக்களின் அபிலாஷைகளையும், அவர்களின் சோகத்தையும் விலைக்கு விற்றுப் பிழைப்புநடத்துகின்றன. சிங்களவரும் தமிழரும் பேச்சுமூலம் தம் பிரச்சினைகளைப் பேசித்தீர்க்கலாம் என்று முடிவெடுத்திருக்கும் இப்பொழுதில், இரண்டு தரப்பிற்கும் மத்தியில் நின்று தம்மை மனித உரிமைகளின் காப்பாளர்களாக அடையாளம் காட்டிக்கொண்டு தம் சுயலாபத்திற்காக எம்மினத்தின் விடுதலைக்கான சக்தியினை கொச்சைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய பொழுதில் தமிழர்கள் அரசியற் களத்தில் ஒன்றுபட்டு எம்மக்களின் ஒட்டுமொத்தக் குரலான போராட்டச் சக்தியினை வலுச்சேர்க்க உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அந்த ஒற்றுமையினைக் குழப்பவும், பழைய எஜமான் விசுவாசத்தை நிலைநிறுத்துமுகமாகவும் தங்களின் அறிவுத்தன்மையினைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் இவர்கள்.

அன்பான யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினரும், இனப்பற்றுக் கொண்ட புத்திஜீவிகளும், மாணவர்களும், ஊடகங்களும் இந்த அமைப்புக்கெதிராக மறுப்பு அறிக்கைகளையும் அவர்களை அடையாளம் காட்டும் அறிக்கைகளையும் உடனடியாக வெளியிட்டுத் தமது எதிர்ப்பலைகளைக் காட்டுமாறு கனடாவாழ் தமிழ்ப் பல்லைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்புக் குழுவான நாங்கள் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழர்களின் சுதந்திரத்திற்கான பேச்சு கயிற்றில் நடப்பதுபோல் நடந்து கொண்டிருக்கும்போது அந்தப் பேச்சு வார்த்தையினைக் குழப்புவதற்கு எத்தணிக்கும் எந்தக் காரணிகளையும் உடனுக்குடன் அடையாளம் காட்டுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். எங்களைப் பொறுத்தவரையில் இவர்களுக்கும் சிங்களப் பேரினவாதிகளான ஜே.வி.பி., சிஹல உறுமய ஆகியவற்றுக்கும் இடையே எந்தவித வேறுபாடுகளும் இல்லை.

தமிழரின் ஆயுதப் போராட்டம் சரியானதா அல்லது பிழையானதா என வாதிடும் உரிமை புலம்பெயர்ந்த எமக்கு இல்லாதிருக்கலாம். எனினும் அந்தப் போராட்டத்தினையும் அதன தலைமையினையும் ஏற்றுக் கடந்த தேர்தலில் எம் மக்களிடம் வாக்குக் கேட்டு வெற்றிபெற்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தற்போதைய அரசியல் நிலைமையில் எம் மக்களால் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பின் கருத்துக்களை வலியுறுத்துவதே இந்த அமைப்புக்களின் எண்ணமாக இருக்கவேண்டும். தம்மை ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக தம்மைத்தாமே காட்டிக்கொள்ளும் இவர்கள், மற்றைய ஜனநாயக அமைப்புக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அதைவிட்டு, இவர்கள் பிற ஜனநாயகவாதிகளை எதிர்ப்பதன்மூலம் தம் சுயவுருவைக் காட்டிநிற்கின்றார்கள்.

கொழும்பில் இருந்து இயங்கும் இவர்கள் தமிழ்களின் உணர்வுகளை விற்றுத் தம் வயிறு வளர்ப்பதை எந்தவித்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் களத்தில் நின்று போராடவும் இல்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்படவுமில்லை, யாழ். பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்படவுமில்லை. பின்னர் எந்த உரிமையினை வைத்துக்கொண்டு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைக்குழு என்ற பெயரில் அறிக்கைகளை வெளியிடுகின்றார்கள்? இவர்களுடைய முகத்திரை உடனடியாகக் கிழித்தெறியப்படவேண்டும்.

இன்றைய நிலையினை உணர்ந்து இவ்வமைப்புக்கெதிராக ஜனநாயக ரீதியில் குரல் எழுப்புமாறு உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)




அண்மையில் கனடாவுக்குச் சென்று திரும்பிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அங்கு மக்மாஸ்ரர் பல்கலைக் கழகத்தின் தமிழ் மாணவர் மன்றத்தினால் நடத்தப்பட்ட விழா ஒன்றில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம். சுவீடன் நாட்டு பேராசிரியரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் வருகை விரிவுரையாளருமான பீற்றர் சோக், மக்மாஸ்ரர் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்மன்றத் தலைவர் எஸ்.நந்தா ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ-180)

# இளையோர் இலக்கிய வட்டம் குடாநாட்டில் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் தகவல் நிலையத்தின் அனுசரணையுடன் இளையோர் இலக்கிய வட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் ரி.சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலக்கிய வட்டத்திற்கான அமைப்பாளர் குழு தெரிவு செய்யப்பட்டது.

இவ் இலக்கிய வட்டத்தின் ஆலோசகர்களாக ரி.சிவதட்சணாமூர்த்தி, அ.சக்திவேல் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இளையோர் இலக்கிய வட்டத்தில் இணைந்து செயற்பட விரும்பும் கலைஞர்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு இலக்கிய வட்ட அமைப்பாளர் குழு அறிவித்துள்ளது. (ம-8)

சிவமயம்

# "லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவன உதவியுடன் அன்னையருக்கான இல்லங்கள் திறப்புவிழாவும், கையளிக்கும் வைபவமும்"

2002-02-10 சிறப்பிதழ் 2002-02-10

## நல்லை ஆதீன குரு ஆசியுரை

லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம் துணைவனை இழந்த அன்னையர்களுக்கு இல்லம் அமைத்துக்கொடுப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ஆலயப் பணியோடு அருமையான ஜீவ சேவை செய்துவரும் சிவயோகம் நிறுவனத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

சென்ற ஆண்டு இவர்களின் உதவியினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக் கூடம் அமைக்கப்பட்டது. அவ்விழாவில் யாம் கலந்துகொண்டு அவர்களின் சேவைகளைப் பற்றி அறிந்துகொண்டோம்.

சைவசமயம் தொண்டுப் பணிக்கு முதன்மை கொடுத்து வந்துள்ளது. அவ்வகையில் சைவசமய நிறுவனங்களுக்கு சிவயோகம் முன் உதாரணமாகச் செயற்பட்டு வருவது போற்றுதலுக்குரியதாகும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று இத்தகைய அறப்பணிகளை எம் நாட்டில் உருவாக்குவது எமக்குப் பெருமைதருகிறது.

இவ் இல்லங்களைப் பெறுகின்ற குடும்பங்களுக்கும் சிவயோகம் அறக்கட்டளையினருக்கும் எமது நல்லாசிகளைத் தெரிவித்து இறையருளை வேண்டிய நிறைவு செய்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர்,
யாழ்ப்பாணம்.

"ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.



## சிற்பியின் வாழ்த்துரை

பல நூற்றாண்டுகளின் முன்னர் யாழ்ப்பாணத் தமிழ் அரசின் தலைநகராக விளங்கி, தமிழ் மக்களின் அரசியல் - பொருளாதார - சமய கலாசார கேந்திரமாக வரலாறு படைத்த - எமது கந்தரோடைக் கிராமம், வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி ஒன்றின் களமாக இன்று மீண்டும் தன்னைப் பதிவுசெய்துகொள்கிறது. வலிய விதியால் தம் வாழ்க்கைத் துணைவர்களையும் வறுமைப் பிணியால் தம் வாழ்வின் நலன்களையும் இழந்து கஷ்டங்களுக்கும் கவலைகளுக்கும் ஆளாகியுள்ள சில விதவைத் தாய்மார்களுக்கு திருப்தியான வாழ்க்கையும் வசதியான வாழ்விடங்களையும் வழங்க வேண்டும் என்ற 'லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை' நிறுவனத்தினரின் இலட்சியம் செயலாக்கம் பெறுவதற்கு தன் மண்ணில் இடமளித்து, ஏனைய மதத்தவர்களைப் போன்று, சைவ சமயத்தவர்கள் இத்தகைய நல்ல பணிகளைச் செய்ய முன்வருவதில்லை என்ற கறையைக் களைவதற்கு தன்னால் ஆன பங்களிப்பை வழங்கியிருக்கின்றது. சைவ மக்களை மட்டும் தன்னகத்தே கொண்டுள்ள இச்சிறு கிராமம்.

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே" என்பதற்கிணங்க இத்தகைய நற்பணிகள் பலவற்றில் ஈடுபடுவதில் இன்பமடையும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களைப் பாராட்டுவதிலும் குடியிருப்பு இல்லங்களின் திறப்புவிழா - கையளிப்பு வைபவங்களில் கலந்து சிறப்பிக்க வருகைதரும் பிரமுகர்களையும் இல்லங்களில் குடிபுகவிருக்கும் தாய்மார்களையும் வாழ்த்தி வரவேற்பதிலும் கந்தரோடை பெருமையும், பெருமகிழ்ச்சியும் அடைகின்றது.

கந்தரோடை. - சி.சிவசரவணபவன்.

## "அன்னையர் இல்லங்கள்" ஒரு கண்ணோட்டம்

முதல் தடவையாக ஓர் இந்து நிறுவனம், சமூகத்திலே கண்ணீரைச் சுமந்து வாழ்ந்துகொண்டிருக்கும் குடும்பங்களை இனங்கண்டு, அவர்களுள் மிகவும் பொருத்தமானவர்களுக்கு இலவசமாக இல்லங்களை வழங்க முன்வந்திருப்பது அதீத சிந்தனைக்கும் ஆரோக்கியமான எடுத்துக்காட்டலுக்கும் உரியதாகும்.

'அறஞ்செய்ய விரும்பு' என்று ஔவை மொழிந்ததன் தாற்பரியத்தினை ஆழமாகப் புரிந்துகொள்ளும் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு நிறுவனமும் அறத்தினை இதுபோன்று விரும்பவேண்டும். அந்த விருப்பம்தான், இன்னும் பல அன்னையர் இல்லங்களைக் கணவரை இழந்துதவிக்கும் குடும்பங்களுக்கு அமைத்திட வழிசமைக்கும்.

'அன்னையர்க்கு இல்லங்கள்' என்ற இலக்கினையடைய விரும்பிய ஆறு. திருமுருகன், லண்டனில் சொற்பொழிவு ஆற்றியபோது, லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனத்தினர் தாயமனதோடு இணைந்து செயற்பட விரும்பியதன் பேறே இந்த அன்னையர் இல்லங்களாகும். மூன்று மாதங்களுக்கு முன்னதாக அத்திவாரமிடப்பட்ட நிலையில் துரிதகதியில் விரைந்து செயற்பட்டவர் திருமுருகன் அவர்கள் பொருத்தமான அன்னையரைத் தெரிவு செய்வதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, அவகாசமளித்த நிலையில், முப்பத்துமூன்று விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சையை 02.02.2002 இல் நடத்திய போதுதான், கண்ணீர் ஊற்றுக்கள் கீற்றாக எழுந்தன. தேர்வாளர் சபையில் கடமையாற்றிய, வைத்திய கலாநிதி பவானி சந்திரகுமார், உதவிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலைவாணி இராமநாதன், தேசிய சேமிப்பு வங்கி மனேஜர் இரதி தியாகராஜா, ஆங்கில போதனாசிரியர் கருணாதேவி சிவாஜியாகும் அன்றையதினம் கண்ணீரால் நனைந்தனர். இன்றைய தினம் "அன்னையர் இல்லங்கள்" இந்த மண்ணுக்கு ஒரு புதிய செய்தியைச் சொல்கிறது.

கே.எஸ். சிவஞானராஜா

## சிவத்தமிழ்ச் செல்வியின் வாழ்த்துரை

மேற்படி நிதியத்தினால் கந்தரோடைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஐந்து வீடுகளும் அதற்கான வசதி வாய்ப்புகளும் மிகவும் வரவேற்கத்தக்கன. ஒழுங்கையும் பாரபட்சமற்ற நீதியையும் கடைப்பிடித்து இவ்வீடுகள் ஐந்து குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுவரை எவரும் நினைத்துப்பாராத ஒரு தர்ம கைங்கரியத்தை லண்டன் சிவயோகம் நிறுவனம் நிறைவேற்றியுள்ளது. நிறுவனத்தின் அன்புக்கட்டளையை மனமுவந்து ஏற்று இப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றிய செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகன் அவர்களுக்கு எமது மண் என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்கும்.

லண்டன் சிவயோக நிறுவனமும் அதன் தலைவர் சீவரத்தினம் அவர்களும் எமது பாராட்டுதலுக்கும் வாழ்த்துக்கும் உரியவர்களாகின்றார்கள்.

மேலும் மேலும் சிவயோக நிறுவனம் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் துயர்துடைக்க அரும்பணி ஆற்ற வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடைக் கிராமத்தில் இந்து சகோதரிகளுக்கு வாழ்விடம் அமைத்துக்கொடுத்த லண்டன் சிவயோகம் அறக்கட்டளையினரை அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

இப்பணி மனிதாபிமானப் பணி. ஆன்மீகப் பணிகளில் ஈடுபடும் அனைவருக்கும் முன் உதாரணப்பணியாக இப்பணி அமைந்துள்ளது. கணவனை இழந்து, குழந்தைகளோடு நிர்க்கதியாக வாடும் எம் சகோதரிகளுக்கு ஆறுதல் அளிப்பதற்கு முன்வந்த சிவயோகம் அறங்காவலர்கள் சமத்தவர்கள் அனைவரினதும் நன்றிக்குரியவர்கள்.

கடந்த மூன்று மாதங்களுக்குமுன்பு வெறும் பற்றையாக இருந்த நிலம், இன்று மாதிரிக் கிராமமாக மாறியுள்ளது. இத்திருப்பணிக்கு அடிக்கல் நடுகின்ற பேறு எனக்குக் கிடைத்ததையிட்டு மனம் பூரிப்படைகின்றேன்.

எமது கல்லூரி ஆசிரியரும், எனது நண்பருமாகிய ஆறு.திருமுருகன் அவர்கள் எமது கல்லூரிச் சூழலில் இப்பணியை நிறைவேற்றியமை எமது கல்லூரிச் சமூகத்திற்குப் பெருமை தருகிறது. அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமய, சமூகப் பணிகளை இன்று லண்டன் சிவயோகம் போன்ற நிறுவனங்கள் பின்பற்றி வருவது மெச்சத்தக்கவிடயமாகும். இவ்வில்லங்களில் வசிக்கப்போகும் குடும்பங்களை மனதார வாழ்த்துவதோடு, சிவயோக நிறுவனப் பணிகள் மேன்மேலும் வளர்ச்சிபெற ஸ்கந்தனை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

க.சிவாஜீ
அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

## வலுவூட்டப்படும் அன்னையர்

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஈருடல் ஓருயிராக ஒருவரை ஒருவர் அன்பு செய்யும் முக்கிய நிகழ்வுத் தொடரின் ஆரம்பம் திருமணம். வாழ்வின் இலக்குகள் குறித்த பல்வேறு எதிர்பார்ப்புகளோடு கருத்தொருமித்த காதலராக அவர்கள் வாழ்ந்துவரும் வேளையில் திடீரென்று வண்டியின் ஒருபக்கச் சில்லு முறிந்து விழுந்துவிட்டால்....?

கணவனை இழந்துவிட்ட குடும்பங்களின் வாழ்வுப் பயணத்தை மீண்டும் செம்மையாக்கிக் கொள்வதற்கு, மிகுந்த அறிவும் ஆற்றலும், திடமான மனப்பாங்கும் தேவை. எமது சமூகம் பெண்களுக்கு எந்தளவுக்கு இவற்றை வழங்கியுள்ளது என்பது கேள்விக்குரியதே.

கணவன் இறந்து விட்டால் எப்படிக் கைம்மைக் கோலம் ஏற்பது. எல்லா விடயங்களிலும் இருந்து ஒதுங்கி வாழ்வது என்றுதான் இந்துப் பெண்கள் பயிற்றப்பட்டிருக்கிறார்கள். பெண் என்பவள் தாழ்ந்து போகும் இயல்புள்ள, தங்கி வாழுகிற உடலிலும் உள்ளத்திலும் மென்மையான ஒரு ஜீவன் என்றவாறு விதைக்கப்பட்ட எண்ணக்கருக்கள், கணவன் இறந்த பிறகாவது அவர் வேறு ஆளுமையை ஏற்பதைத் தடை செய்கின்றன.

மேலும் மஞ்சள் குங்குமம் இழக்கல், தாலி இழத்தல் ஆகிய விடயங்கள் அவளது உள்ளத்தை மிக மோசமாக உருக்குலைக்கும் விடயங்கள். எமது இந்தியத் திரைப்படங்களில் கணவன், இறந்ததும் ஒரு வலிய கரம் வந்து பெண்ணின் பொட்டை அழிக்கும். வளையல்களை உடைக்கும். அதன்பின் வரும் காட்சிகளில் அவள் வெள்ளைச் சேலை அணிந்து வருவாள். இவை எல்லாம் யதார்த்தத்தில் விதவையாகிவிட்ட பெண்ணின் அகக் காட்சியில் வர அவள் மனம் வரண்டு போகிறது.

உலகம் முழுவதிலுமே ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் ஒன்றரை மடங்கு அதிகமாக உள ஆரோக்கியம் குன்றி இருக்கிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆழ்ந்த மனச் சோர்வு, பீதிநோய், கண்டிதக் கோளாறு, மெய்ப்பாட்டு நோய்கள் போன்ற உளத் தாக்கங்களுக்குப் பெண்கள் அதிகம் உட்படுகிறார்கள். திருமணமாகிக் குடும்ப வாழ்வு வாழும் பெண்களைவிடக் கணவனை இழந்த பெண்கள் அதிக உளப்பாதிப்புக்கு உள்ளாவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

எமது சமூகத்தில் விதவைப் பெண்ணுக்குப் பாதுகாப்பு இல்லை. அவளை வன்முறைக்கு உட்படுத்துவது சுலபம் என்ற கருத்தும் சமூகத்தில் உள்ளது. வயதில் குறைந்த பிள்ளைகள் பலர் வீட்டிலிருக்கும்போது, அவளது நெருக்கீடு இன்னும் அதிகமாகிறது. இவர்கள் தங்கி வாழும் இடங்கள் பாதுகாப்பற்றவையாக இருக்கும்போது தவறான வழிகளில் ஈடுபடவும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். எமது பிரதேசத்தின் கொடிய போர்ச் சூழலில், குடும்ப பொருளாதாரத்தைச் சிறிதளவாவது ஈட்டித்தந்த ஆண்மகனை இழந்து பெரும் பொருளாதாரப் பிரச்சினைக்குள் சிக்கித் தவிக்கும் குடும்பங்களாவே கணவனை இழந்த அனைத்துக் குடும்பங்களும் இருக்கின்றன.

கணவனை இழந்த பல பெண்கள் தமது ஆழ்ந்த உணர்வுகளை இன்னும் சமப்படுத்திக்கொள்ள முடியா நிலையில் உள்ளனர். சிலர் இன்னும் கணவனின் இழப்புத் துயரில் இருந்து சிறிதும் மீளவில்லை. சிலரிடம் மெய்ப்பாட்டு அறிகுறிகள் பலமாகக் காணப்படுகின்றன. பலர் எந்த விதத் தீர்மானமும் எடுக்க முடியாத நிலையில் இருக்கின்றனர். எவருக்கும் பிரச்சினை தீர்த்தல் படிமுறைகள் தெரிந்திருக்கவில்லை. பிரச்சினைகளை இனம் காணவே முடியாத நிலையிலேயே பலர் உள்ளனர். கல்வித் தரக்குறைவு, நம்பிக்கையின்மை, மூலதனம் இன்மை போன்ற காரணிகளால் எந்த வேலையும் செய்யாதவர்களாகவே இத்தகையவர்களில் பலர் உள்ளனர்.

லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம் இவர்களில் ஐவருக்கு வலுவான ஓர் உதவிக் கரம் நீட்டியுள்ளது. இவர்களின் எதிர்கால வாழ்வுப் பயணம் இலகுவாக ஆவதற்கு பெரு முயற்சி செய்துள்ள செஞ்சொற்செல்வன் ஆறு.திருமுருகன் அவர்கள் மிகவும் பாராட்டப்படவேண்டியவர். அவரது முன்மாதிரிகளைப் பலர் இனிமேல் பின்பற்றக்கூடும்.

பெண் தலைமை தாங்கி வழிநடத்த வேண்டியுள்ள குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களது உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். திறன் விருத்திப் பயிற்சி அளிக்கப்பட்டு, வலுவூட்டப்பட்டுச் சொந்தக் காலில் நிற்கும் நிலைக்கு இவர்கள் உயர்த்தப்பட வேண்டும். நெருக்கீட்டை எதிர்கொள்ளும் வழிமுறைகள் கற்பிக்கப்பட்டு சூழலில் உள்ள ஏனைய மக்களின் உதவி, ஒத்தாசை கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

- கோகிலா மகேந்திரன்.

## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனை உரை

1999ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற அனைத்துலக சைவ மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டன் சென்ற சிறியேனை லண்டனில் வாழும் பல சைவ நிறுவனங்கள் அழைத்துக் கௌரவித்தன. லண்டன் சிவயோகம் அறக்கட்டளையினர் ஆற்றிவரும் ஆன்மீகப்பணிகளை எடுத்துரைத்து அவர்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்தவர் காரம்பன் திருவூரைச் சேர்ந்த சிவானந்தஜோதி அவர்கள்.

லண்டன் சிவயோகம் நிறுவனத்தின் தலைவராக விளங்குகின்ற மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகேந்திரம் சீவரத்தினம் அவர்களுடன் எமக்குத் தொடர்பு ஏற்பட்ட நாள்முதல் பல நல்ல பணிகளை எம் மண்ணில் நிறைவேற்றுவதற்கு அவர் பேருதவி புரிந்துவருகின்றார்.

லண்டன் முத்துமாரி அம்மன் ஆலயம் இன்று மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. சிவயோகம் அறக்கட்டளையினரின் நிர்வாகத்தின் கீழுள்ள இத்திருக்கோயிலின் வருமானத்தில் ஒரு பகுதி தொடர்ந்து தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவது பலரும் அறிந்ததே. அவ்வகையில் சென்ற ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பன்னிரண்டரை லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளைக்கொண்ட கண் சத்திரசிகிச்சைக் கூடத்தினை இவர்களின் உதவியினால் நாம முன்னின்று கட்டிமுடிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

கடந்த சித்திரை மாதம் லண்டன் முத்துமாரி அம்மன் கோயிலில் தொடர் விரிவுரை ஆற்றுகின்றபேறு எனக்குக் கிடைத்தது. எமது நாட்டில் போரின் அனர்த்தங்களினால் குடும்பத் தலைவர்களை இழந்து பெண்கள் படும் அவலத்தை அங்கு எடுத்துரைத்தேன்.

சிவயோகம் நிர்வாக சபையினர் எனது உரைக்கு மதிப்பளித்து, இப்பெரும் பணியை இன்று நிறைவேற்றித் தந்துள்ளனர். கந்தரோடைக் கிராமத்தில் ஒரு லட்சத்து எழுபதினாயிரம் ரூபா செலவில் காணி கொள்வனவு செய்யப்பட்டு, ஒவ்வொரு வீடும் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வரை செலவு செய்யப்பட்டு அழகாகக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. சிவயோகம் அன்னையர் குடியிருப்பு என்ற வீடமைப்புத் திட்டத்திற்கு அருகில் சிவயோகம் சிறுவர் பூங்கா, சிவயோகம் சிறுவர் பாடசாலை என்பனவும் உருவாக்கப்பட்டு வருகிறது.

பழந்தமிழ் வேந்தர்கள் அரசமைத்து ஆட்சி செய்த புனித பூமி கந்தரோடை. இத்திருவூரில் சைவ சமயத்தவர்களின் பெயரில் கணவனை இழந்த அன்னையர்க்கு குடியிருப்பு அமைக்கப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும். எமது சமயத்தவரிடையே நவீன சீர்திருத்தச் சிந்தனைகள் இன்று முன்வைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

எம்மை ஆற்றுப்படுத்துகின்ற அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள் எமது சமயத்தவரின் பெயரால் பல புதிய பணிகளை, சீர்திருத்தங்களை ஏற்படுத்தி வருகின்றார்கள். இந்நிலையிலேயே என் அறிவுக்கு எட்டிய சில கைங்கரியங்களை இறைவனுடைய திருவருளாலும், பெரியோர்களினுடைய ஆசியினாலும், அன்பர்களின் பேருதவியினாலும் நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

அவ்வகையில், சிவயோகம் அன்னையர் குடியிருப்புப் பணிக்கு உதவிய லண்டன் சிவயோகம் அறக்கட்டளையினருக்கும், கட்டட நிர்மாணப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றித் தந்த ஆறுமுகநாதன் இணர்த்தனன் நிறுவனத்தினருக்கும் பொறியியல் பணியை நிறைவேற்றிய சிவலோகநாதன் அவர்கட்கும் சிறுவர் பூங்காவிற்கான வடிவமைப்பை உருவாக்கிய சிற்ப நிர்மாணக் கலைஞர் வே.பாலேந்திரன் அவர்களுக்கும், எனது உளப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன.

அன்னையர் இல்லங்களை வழங்குவதற்காக நடத்தப்பெற்ற நேர்முகப்பரீட்சையில், பரீட்சையை சிறப்பாக நடத்த உதவிய பெரியவர்களுக்கும் கந்தரோடைக் கிராமத்தில் இப்பணிக்குப் பேருக்கம் வழங்கிய கிராம மக்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இத்தகைய அறப்பணிகளில் இளைய தலைமுறையினர் ஈடுபடவேண்டும் என்பதனை வலியுறுத்துவதோடு யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற இந்து சமய நிறுவனங்களையும், இந்துக்கோயில்களின் அறங்காவலர்களையும் இது போன்ற சமுதாயப் பணிகளில் ஈடுபடுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். சிவயோகம் அன்னையர் குடியிருப்புப் பணி நிறைவேற்றுவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகூறி எம் மண்ணில் அமைதியும் ஆனந்தமுமான வாழ்வும் கிடைக்கப் பிரார்த்தித்து எனது பிரார்த்தனை உரையை நிறைவு செய்கின்றேன்.

- ஆறு.திருமுருகன்.

# 'இராணுவத்தில் விடுதலைப் புலிகள்' 'லக்பிம' பத்திரிகையின் கற்பனை

நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் விடுதலைப் புலிகள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று இராணுவத் தளபதி லயனல் பலகல்ல அண்மையில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து தெற்கில் பெரும் சலனத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை வைத்து 'லக்பிம' என்ற சிங்களப் பத்திரிகை கற்பனைச் சித்திரம் ஒன்றை வரைந்துள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

நாட்டில் சமாதானம் உருவாக்கப்பட்டால் விடுதலைப் புலிகளை ராணுவத்தில் சேர்க்க வேண்டுமென ராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் புலிகளை எவ்வாறு சேர்ப்பது என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஆனால் அது இப்படியும் இருக்கலாம்:-

தடித்த உயரமான இளைஞன் ஒருவன் ராணுவத் தளபதியிடம் நேரடியாகச் சென்றான்.

அந்த இளைஞன் ராணுவத் தளபதியை நோக்கி, "சேர், நான் ராணுவத்தில் சேர்வதற்கு வந்துள்ளேன்" எனக்கூறினான்.

ராணுவத் தளபதியின் கை அவரை அறியாமலே கைத்துப்பாக்கியைத் தேடியது.

"மடையா. ராணுவத்தில் சேர்வதற்கு ராணுவத் தளபதியிடமா வருவது. உன்னைமாதிரிப் படிக்காத ஆள்களுக்கு ராணுவத்தில் இடமில்லை" - ராணுவத் தளபதி கர்ஜித்தார்.

இளைஞனின் முகம் சிவந்தது.

"நான் படியாதவன் அல்ல. நான் பி.ஏ.பட்டதாரி. பதிலுக்கு கத்தினான் இளைஞன்.

தற்போது ராணுவத் தளபதியின் முகம் சிவந்தது.

"பி.ஏ.பட்டதாரிகளை ராணுவத்தில் சேர்த்தவுடன் அவர்களது படிப்பிற்கு ஏற்ற பதவி இல்லை எனத் தப்பி ஓடுகிறார்கள்" என ராணுவத் தளபதி கோபத்துடன் கூறினார்.

"ராணுவத்திற்குப் பட்டதாரிகள் தேவையில்லை. நல்ல உயரமுள்ள, நல்ல உடற்தோற்றமுள்ள இளைஞர்களே ராணுவத்திற்குத் தேவை" - தொடர்ந்தார் இராணுவத் தளபதி.

இளைஞனோ விட்டபாடில்லை " எனது உயரமும் நெஞ்சளவும் இராணுவத்தில் சேர்வதற்குப் பொருத்தமானது சேர். எனது உயரம் 6 அடி 7 அங்குலம். நெஞ்சின் சுற்றளவு 50 அங்குலம்" என்றான்.

ராணுவத் தளபதிக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது. "உடல் வாகும் உயரமும் இருந்தால் மட்டும் ராணுவத்தில் சேர்க்கமுடியாது மனிதா" என்றார். "நான் உன்னை வெளியே அனுப்புவதற்கு முன்பாக நீயாகவே ஓடித்தப்பிவிடு" என்றும் கூறினார்.

இளைஞன் சோகத்துடன் திரும்ப முனைந்தான். ஆனால் திடீரென அவனுக்குப் புதிய யோசனை ஒன்று உதித்தது. மீண்டும் ராணுவத் தளபதியை அணுகினான்.

"சேர் ராணுவத்தில் என்னை ஏன் சேர்க்கவில்லை என்பதை நான் அறிவேன். நான் விடுதலைப் புலி உறுப்பினர் என்பதை உங்களிடம் யாரோ கூறி விட்டனர்" என்றான்.

திடுக்கிட்டார் ராணுவத் தளபதி. தனது ஆசனத்தை விட்டெழுந்தார். முன்னே வந்து இளைஞனைக் கட்டியணைத்து முத்தமிட்டார்.

"கடவுளே நீ விடுதலைப் புலி உறுப்பினர் என்பதை நான் எப்படி அறிவேன்" - ராணுவத் தளபதியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

நிலைமையை ஒருவாறு சமாளித்த ராணுவத் தளபதி தனது உதவியாளரான ராணுவக் கேணலை உடன்அழைத்தார்.

"இந்தத் தம்பிக்கு உடனடியாக நியமனக் கடிதத்தைத் தயார் செய்" இது ராணுவத் தளபதியின் கட்டளை. "இன்றிலிருந்து இவர் ராணுவக் கேணலாக் நியமிக்கப்படுகிறார்" என்று உத்தரவிட்டார் அவர்.

ராணுவத் தளபதியின் உதவியாளரின் முகம் கோணியது.

"இல்லை சேர். இந்தப் பையனுக்கு சார்ஜன் பதவியை வழங்குவோம். ராணுவத்தில் புலிகளைச் சேர்க்கத் தொடங்கிய பின்னர் ராணுவத்தில் 40 ஆயிரத்து 123 கேணல்கள் உள்ளனர். ஆனால் 234 சார்ஜன்களே உள்ளனர்" - என உதவியாளர் ராணுவத் தளபதிக்கு ஆலோசனை வழங்கினார்.

**தமிழில் : கஜனி**

இதைக் கேட்டதும் ராணுவத் தளபதி பேயாக மாறினார்.

"அப்ப ராணுவத்தில் சார்ஜன்டுகள் போதாது என்றா நீர் கூறுகிறீர்" - என உதவியாளரான கேணல் மீது பாய்ந்தார்.

"அப்படியானால் இன்றிலிருந்து உம்மை சார்ஜன் பதவிக்கு பதவி இறக்குகிறேன்" - என ராணுவத் தளபதி ஆத்திரத்துடன் கூறினார். இதைக் கேட்ட உதவியாளர் கூனிக்குறுகி, "ஏன் சேர் உங்களுக்கு கீழே எப்போதும் பணிபுரியும் எமக்கு பதவி இறக்கம் செய்கிறீர்கள். எங்களை பதவி இறக்கிவிட்டு எங்களுக்கெதிராகச் சண்டையிட்ட புலிகளுக்குப் பதவி உயர்வு வழங்குகிறீர்கள்?" எனக் கேட்டார்.

தனது உதவியாளரை அனுதாபத்துடன் பார்த்த ராணுவத் தளபதி சத்தமாக இப்படிக் கூறினார் -

"உங்களுக்குப் பதவி உயர்வுகளை வழங்குவதால் யுத்தத்தை நிறுத்தமுடியாது. இல்லையா? ஆனால் விடுதலைப் புலிகள் அனைவரையும் ராணுவத்தில் சேர்த்து அவர்களுக்கு உயர் பதவிகளை வழங்கினால் யுத்தம் தானாகவே முடிவுக்குவரும். பாரப்பா இதுவரை எந்தவொரு ராணுவத் தளபதிக்காவது இந்த மூளை இருந்ததா? ★

# கடவுளின் ஆலயமாகிய நம்மை தூய்மையாக வைத்திருக்கவேண்டும்

இறைவன் வாழும் இல்லம் ஆலயம் எனப்படும். ஆலயம் புனிதமானது.

நாம் ஒவ்வொருவரும் இறைவனின் ஆலயமாய் இருக்கின்றோம். இறைவன் பரிசுத்தத்துக்குள் வாழ்பவன் அவரது ஆலயத்தைப் புனிதமாக வைத்திருக்கவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

"என் உறைவிடத்தை அவர்கள் நடுவில் நிறுவுவேன். அவர்கள் நடுவே நான் உலாவுவேன். நானே அவர்கள் கடவுள்! அவர்கள் என் மக்கள்" என்று கடவுளே சொல்லியிருக்கிறார். (லேவி.26[12])

இறைவன் நம்முள் வாசம் செய்கிறார் என்பதை உணரச்செய்து, பாவ வாழ்வை விட்டுவிலக்கி, பரிசுத்த வாழ்வுக்குள் எம்மை அழைத்துச்சென்று நிலை வாழ்வுக்கு எம்மைத் தகுதியுடையவர்களாக்குவதே வேதாகம நற்செய்தியின் குறிக்கோளாகும்.

நற்செய்தியானது நம்மைப் பாவத்தில் இருந்து விடுவிக்கும்; அது நம்மை மரணத்திலிருந்து தப்புவிக்கும்.

"நேர்மையுடையோர் தம் விசுவாசத்தினால் வாழ்வடைவர்" என்ற மறைநூலின் கூற்றுக்கிணங்க மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் கடவுளின் செயல் நற்செய்தியில் வெளிப்படுகின்றது.

**ஞாயிறுநற்பிரசாதம்**

இறைவனின் ஆலயமாகிய எமது உடலையும் உள்ளத்தையும் பரிசுத்தமாகப் பேணி 'யேசு கிறிஸ்துவே' ரட்சகர், வாக்களிக்கப்பட்ட இறைமகன் என அறிக்கையிடும் ஒவ்வொரு விசுவாசிக்கும் இறைமக்களாகும் உரிமை இறைவனால் அளிக்கப்பட்டிருக்கின்றது.

"இறையரசு நம்மிடையே வரவேண்டும்" எனப் பரலோக மந்திரத்தில் இறைவனை நாம் தினமும் வேண்டுகின்றோம். "கண்களுக்குப் புலப்படும் முறையில் வராத அந்த இறையாட்சி நம் நடுவிலேயே செயற்படுகின்றது" (லூக் 17[21]) என்ற இறைமகன் யேசுவின் வார்த்தைகள் நமக்கு உண்மை நிலையை நன்கு எடுத்தியம்புகின்றன.

இறைவனின் ஆலயமாகத் திகழும் ஒருவர், இறைசித்தப்படி வாழமுயல்வதால் நன்மையானவற்றைத் தேடி வாழ இசைவாக்கமடைகிறார். இதனால் உண்மை, அழகு, நேர்மை, அமைதி, முழுமை போன்ற பண்புகள் அவரில் மிளிர்வதைக் காணலாம்.

இவற்றையெல்லாம் நாம் ஆதாயமாக்கும்படி, நாமே இறைவனின் ஆலயம் என்பதை உணரவைத்து இறைவழிக்கு எம்மை இட்டுச் செல்பவர் யார்?

"அறுவடையோ மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடை உரிமையாளராகிய இறைவனிடம் கேட்கும்படி" இயேசு தாமே நமக்குக் கற்றுத்தந்திருக்கிறார். (லூத் 10[2]) மேலும் "இதோ நான் விரைவாகவே வருகின்றேன் இறைவார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக்கொள்கிறவர்களே பேறுபெற்றோர். (தி.வெ. 22[7]) என்ற அவரின் வார்த்தைகள், நற்செய்தி அறிவுப்பணியின் அவசரதேவையை நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

காலத்தின் தேவையை உணர்ந்து நற்செய்தியை அறிவிக்கும் கடப்பாடு கிறிஸ்துவுக்குள் வாழும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

கிறிஸ்துவை அறியவிரும்புவோர் நற்செய்தி அறிவிப்பாளரிடமிருந்து எதிர்பார்ப்பது, தங்களது சந்தேகங்களைப்பற்றி ஆராயும் விவாதங்களை அல்ல. மாறாக, கிறிஸ்தவத்துடன் எம்மை ஈடுபடுத்திக்கொண்டால் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதைக் காட்டும்படிதான் கேட்பார்கள். ஆகவே, நற்செய்திப் பணியாளர்களின் வாழ்வு கிறிஸ்துவுக்கு சாட்சிபகர்வதாய் அமைய வேண்டும்.

இதனையே "என்னோடு இராதவர் எனக்கெதிராக இருக்கிறார்; என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச்செய்கிறார்" என்றார் எம் ஆண்டவர் யேசு (லூக் 11[23])

இது கிருபையின் கர்லம் மாந்தர் யாவர்மேலும் கடவுளின் ஆவி பொழியப்படுமென்று யோவேல் இறைவாக்கினரால் கூறப்பட்ட காலம் இதுவே. கடந்த வருடத்தில் கேரளாவின் போட்டார் ஆச்சிரமத்திலிருந்து வந்த அகஸ்டின் மொன்டேகட் அடிகள் சகோதரன் ஜோர்ச், தரகன் இருவரினாலும் யாழ்.மறை மாவட்டத்தில் ஏற்றிவைக்கப்பட்ட ஆன்மீக தீபத்தைப் பிரகாசித்து எரியச் செய்வது கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். நாம் கிருபையாய்ப் பெற்றதை மற்றவர்களுக்கும் கொடுப்போமாக.

*கடவுளின் ஆலயம் நாமே*
*உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி*
*நம்மைத் தூய்மைப்படுத்துவோம்.*
*கடவுளுக்கு அஞ்சி தூய வாழ்வில் நிறைவடைவோம்.*

**- சேவியர் ஜோசவ்** ★

# துயர் பகிர்கின்றோம்

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்

**க.சி.நமசிவாயம்**

*(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)*

அவர்கள் காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தோம்.

*"நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும் பெருமை யுடைத்திவ்வுலகு"*

*– திருக்குறள்*

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், உறவினர்கள் அனைவரினதும் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

(538) -உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம், வடபகுதி.

# நன்றி நவிலல்

We Serve

அண்மையில் எங்கள் கழகத்தினால் சமூக மேம்பாட்டிற்காகவும் நலிவுற்ற மக்களினதும் சேவையைத் தொடரவும் நடத்திய நதி சேகரிப்பு நிகழ்ச்சிக்கு சிறிதும் தயங்காது உதவிய கருணை உள்ளங்களுக்கு - குறிப்பாக யாழ். வர்த்தகப் பெருமக்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை அன்புடன் தெரிவிக்கிறோம்.

தலைவர் / உறுப்பினர்

(C-20672) மானிப்பாய் வட்ட லயன்ஸ்கழகம்

# கண்ணீர் அஞ்சலி



**அமரர் கனகசூரியர் ஜெயசூரியர்**

(முன்னாள் முகாமையாளர் பெனின்சுலா குறூப் K.R.சிவலோகநாதன் அன் கோ)

அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிப்பதோடு, அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

K.R.சிவலோகநாதன் அன்கோ,
V.K.இராசரத்தினம்,
(525) ஸ்ரீகுமரன் உரிமையாளர்களும், ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனராஜா ரஞ்சனியம்மா

யாழ்ப்பாணம், பவானி விலாஸ் (கச்சான்) தொழிலக உரிமையாளர் தனராஜா அவர்களின் அன்பு மனைவி திருமதி ரஞ்சனியம்மா 07.02.2002 வியாழக்கிழமை இந்தியாவில் திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - மாணிகத்தின் அன்பு மருமகளும் மகேந்திரன், குமாரி, பாலா, ராஜா, நோனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறீதரன், முரளீதரன், சுதந்திரன், சசிகலா, சுலோஜனா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுபலக்சுமி, சாரதாம்பாள், சபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.02.2002) சனிக்கிழமை திருச்சியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பவானி விலாஸ்,*
*கச்சான் அல்வா தொழிலகம்,*
*32, கல்லூரி வீதி, நீராவியடி.,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
நிர்வாகமும் ஊழியர்களும்.

(528)

## திருமதி சின்னத்தங்கம் தம்பு

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் தம்பு அவர்கள் 09.02.2002 சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அருணாசலம் தம்பு (முன்னாள் தபாலத்தியட்சகர், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் சுந்தரலக்சுமி (லண்டன்), தேவாம்பிகை (கனடா), சண்முகநாதன் (முன்னாள் ஆசிரியர், றோ.க.த.க.பாடசாலை, ஆனைக்கோட்டை), குமாரசாமி (கட்டட ஒப்பந்தகாரர், உடுவில்), கதிரவேல் (உதவி முகாமையாளர், ஸ்ரான்லி வீதிக் கிளை, இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் நாகமுத்து சின்னையா (பொறியியலாளர், கட்டடத்திணைக்களம், கொழும்பு), அமரர் அ.வ.பாலசுப்பிரமணியம் (அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தலவாக்கொல்லை), தனலட்சுமி, தவமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுசீலா, ஸ்ரீரங்கன், மஞ்சுளா, பால. இரவீந்திரன், ரஜனி, கிரிஜா, சியாமளா, சசிகலா, வனஜா, ஸ்ரீதரன், கலைச்செல்வி, கலைவாணி, செந்தில்குமரன், சரவணன், ரவிசங்கர், கோபிகிஸ்ணா, கார்த்திகா, ருத்ரா, கல்யாணி, தாரணி, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆரணி, ஆர்த்தி, ஜனகன், சங்கவி, நந்தஷ், மயூரா, ராகவி, ஷாலினி, பிரனீத்தா, புருஷோத்தமன், லாவண்யா, அபிலாஸ், ஆரபி, ஆதவன், கௌஷி, காயத்திரி, வைஷ்ணவி, பிரணவி, பிரசன்னா ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் கோயில் வீதி,*
*உடுவில்.*

(530)

தகவல்:
தம்பு சண்முகநாதன் (மகன்).

உ
சிவமயம்

# திருமணப் பெருவிழாவிற்கு இனிய நல்வாழ்த்துக்கள்

ஜெயபாஸ்கரன் தனுஷா

மங்கலம் பொங்கும் இல்லறம் என்னும்
நல்லறம் காணும் இனிய நன்னாளில்
எங்கள் அன்பு மாமாவுக்கும் மாமிக்கும்
இதயம் கலந்த நல்வாழ்த்துக்களை
மகிழ்ச்சி பொங்க கூறிக்கொள்கின்றோம்.
வாழ்க பல்லாண்டு! இனிய முத்தங்கள்!!

இன்றைய நன்னாளில் திருமணவிழா நிகழும் நீர்கொழும்பு றெயின்போ வரவேற்பு மண்டபத்தில் நேரில் வந்து ஆசிகூறி அரவணைத்து இன்பமுத்தங்களை அன்போடு பரிமாறமுடியாது போனாலும். இங்கிருந்து எங்கள் வாழ்த்துக்களை அன்போடு தெரிவிக்கின்றோம். பல்லாண்டு சீரும் சிறப்போடும் வாழ தோழமை நிறைந்த வாழ்த்துக்கள்.

த.ஆத்மன் ~ ஆண்டு ஒன்று பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
த.பிரமன் ~ சோமசுந்தரம் பாலர் பாடசாலை, யாழ்ப்பாணம்.
த.பரணிகாந் ~ ஆண்டு 5, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(510) த.சரணிகாந் ~ சோமசுந்தரம் பாலர்பாடசாலை, யாழ்ப்பாணம்.



# திருமண வாழ்த்து

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷு வருஷம் தைத்திங்கள் 28ஆம் நாள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 7.29 மணிமுதல் 8.41 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்லவேளையில்.

திரு.திருமதி கந்தசாமி
தம்பதிகளின் ஏகபுத்திரன்
திருநிறை செல்வன்
பேரின்பதயா (தயா)
அவர்களுக்கும்

திரு.திருமதிஆறுமுகம்
தம்பதிகளின் கனிஷ்டபுத்திரி
திருநிறை செல்வி
சசிலதா (சசி)
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு நெதர்லாந்து நகரில் மார்டினஸ் பிளக் பிஎெய்ன் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடைபெறுகின்றது. புது மணமக்களை சகல சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நலமாக வாழ வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துபவர்கள்:
திருமதி அ.கந்தசாமி
திரு.வே.சுந்தரலிங்கம் குடும்பம்,
திரு.வ.சுரேஷ்குமார் குடும்பம்,
உற்றார், உறவினர்கள்.

"திருவேரகம்"
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (C/20673)



# திருமணத் திருநாளில் இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!!

மணமகன்
ஜெயபாஸ்கரன்

மணமகள்
தனுஷா

இல்லற வாழ்வில் இணைந்து நல்லறம்
காத்து வாழ்வின் ஒளிவிளக்காய்
நல்லோர் போற்றும் இனிய வாழ்க்கை
வாழ எல்லாம் வல்ல இறைவன் நல்
ஆசிகள் வழங்க இதயவாஞ்சையுடன்
வாழ்க வாழ்க பல்லாண்டு என
வாழ்த்துகின்றோம்.
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."
என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு அமைவாக
நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
வாழ்க! வாழ்க!!

நெஞ்சம் மறவாத:
பணியாளர்கள்,
றியோ கிறீம் ஹவுஸ்
(534) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## பிரதி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.திருமறைக் கலாமன்றம் தவக்காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் மேடையேற்றும் பிரமாண்டமான பக்திப் படைப்பாகிய 'திருப்பாடுகளின் காட்சிக்காண' பிரதி வழங்கும் வைபவம் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு குருநகர் யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஜெயசேகரம் அடிகள் தலைமை வகிப்பார். தொடர்ந்து கடந்த வருடம் நடைபெற்ற 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் காட்சியின் ஒளிநாடா திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்குகொள்ளும் இப்பக்திப் படைப்பில் தம்மையும் இணைத்துக் கொள்ள விரும்பும் இருபாலாரும் அன்றைய தினம் இந்நிகழ்விற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.(ம-8)

## புதிய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.10

திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்கம், சிறுவர் நிறை வாழ்வு இல்லம் ஆகியவற்றின் புதிய கட்டடங்கள் திறப்பு விழாவும் பெற்றோர் பாதுகாவலர் ஒன்றுகூடலும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக அரச அதிபர் க.சண்முகநாதனும், சிறப்புவிருந்தினர்களாக அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அலுவலகப் பொறுப்பதிகாரி ரிற்றோ தோமஸ், நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன், சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க. சிவராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (ம-8)


# வேதனம் வழங்கல்

பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்களின் ஜனவரி - ஜூன் 2001இற்குரிய சம்பளம் 10.02.2002 (ஞாயிறு) தொடக்கம் 14.02.2002 (வியாழன்) வரை நாகபூஷணி அம்மன் கோயிலடி, கோண்டாவில் கிழக்கு எனும் விலாசத்தில் வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்,
தொழில் முகாமையாளர்,
(550) பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்.


# கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபை உப தலைவருமாகிய சமூகத் தொண்டன் அன்புக்குரிய
அமரர்
**வாதவூரர் தவச்செல்வன் (J.P.)**

அவர்களின் மறைவையிட்டு மீளாத்துயர் அடைகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
ஆத்மா சாந்தி அடைவதாக!

*3ஆம் கட்டை,*
*கே.கே.எஸ். றோட்,*
*தாவடி, கொக்குவில்.*

சோ. சிவராசா (மோ.மெக்கானிக்)
குடும்பத்தினர்.
(537)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி காங்கேசு

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தொலைத் தொடர்பு திணைக்களம்)*

சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடாகக் கொண்ட சின்னதம்பி காங்கேசு அவர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (08.02.2002) சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் மானிப்பாயைச் சேர்ந்த வெற்றிவேலு தம்பதிகளின் அன்பு மருமகனும் சரோஜிதேவியின் அன்புக் கணவரும் கிருஷ்ணமோகன், ஜெயந்தகுமாரன், காலஞ்சென்ற உஷாதேவி, பிறேமினி, ரமாஜினி, சுபோதினி, முரளிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதா, ரஞ்சினி, ராமன், சபா, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் கைலாயபிள்ளை, தங்கமுத்து, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 13.02.2002 புதன்கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சு வீதி,*
*சாவகச்சேரி.* (542)

*தகவல்:*
சி.நவரத்தினம் (சகோதரர்)

## திருமதி கந்தப்பிள்ளை எள்ளுப்பிள்ளை

களுவாக்கட்டை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தப்பிள்ளை எள்ளுப்பிள்ளை நேற்று (09.02.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை (பொலீஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற E.K.சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவநேசம் (வைத்தியகலாநிதி, U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற லீலாவதி, பத்மநாதன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் விமலாதேவி - சித்திவிநாயகவடிவேல், தவராஜேஸ்வரி - பாலகிருஷ்ணன், சிவநாதன் (பொறியியலாளர்) - துஷ்யந்தி (U.K.), ஈஸ்வரன் (கச்சேரி, சாரதி) - பாலசௌந்தரி (ஆசிரியை), அசோக்குமாரன் (மகாஜனக் கல்லூரி), விஜயபவானி (ஆசிரியை), ரமணன் (பொறியியலாளர்) - புனிதம் (சிங்கப்பூர்), இலட்சுமணன் - ஜெயகௌரி (U.K.), ஹரிஹரன் (வைத்திய கலாநிதி, U.K.), மீரா (கணக்காளர், U.K.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காந்தரூபன், கேசவன், யாதவன், செந்தூரன், சுபாஷினி, மகிழ்யா, பரிமளை, சங்கீதா, சர்மிளா, பிரமிளா, தனயன், விதுர்சன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் உடுவிலில் நடைபெற்று தகனக்கிரியைகள் மருதனார்மடம் பூவோடை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*5ஆம் லேன்,*
*உடுவில்.*

தகவல்:
ஈசன், தேவன்.
(545)

# யாழ்ப்பாண அபிவிருத்திக்கு புதிய செயற்றிட்ட வரைவு

## செயலகம் தயாரிக்கின்றது.

மூளாய்,பெப்.10

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கை களைத் துரிதப்படுத்தும் நோக்குடன் 'யாழ்ப்பாணத் திட்டம்' என்ற புதிய செயற்றிட்டம் ஒன்றை யாழ்.செயலகம் தயாரித்து வருகின்றது.

இந்த ஆண்டுமுதல் நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் இப்புதிய செயற் றிட்டத்தின் மூலமாக மேற்கொள்ளப் படவேண்டிய வேலைகள் குறித்து யாழ்.செயலகம் சகல திணைக்களங் களிடமிருந்தும் கோரிக்கைகளையும் ஆலோசனைகளையும் சேகரித்து வருகின்றது.

யுத்தத்தின் பாதிப்புகளிலிருந்து மீள்வது மற்றும் அபிவிருத்தி, மக் களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த் தல் போன்ற இலக்குகளைக் கொண்ட தாகவும், பல்துறைசார்ந்த பல்வேறு துணைச் செயற்றிட்டங்களை உள் ளடக்கியதாகவும் மேற்படி யாழ்ப்பா ணத்திட்டத்திற்கான ஆரம்ப வரைவு தயாரிக்கப்படவிருக்கின்றது.

ஏற்கனவே 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறான பாரிய செயற்றிட்ட வரைவு ஒன்று தயாரிக் கப்பட்டிருந்தது. "புதிய யுகத்தின் உதயம்" என்று பெயரிடப்பட்ட இச் செயற்றிட்டம் இதுவரை பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற் போதைய யாழ்ப்பாணத் திட்டம் மேற்படி திட்டத்தை அடியொற்றிய தாகவே தயாரிக்கப்படவிருக்கின் றது. எனினும் குடாநாட்டில் தற்போது மாற்றம் கண்டுள்ள புறச்சூழல், சனத் தொகை, மக்களின் தேவைகள் போன்ற அம்சங்களை கருத்தில் எடுத்து புதிய செயற்றிட்டத்தின் வரைவு தயாரிக்கப்படவுள்ளது.

புதிய செயற்றிட்ட வரைவில் சேர்த்துக்கொள்ள வசதியாக அனைத்து அரச திணைக்களங்களி டமிருந்தும், பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்தும் ஆலோசனை கள் மற்றும் கோரிக்கைகளை யாழ். செயலகம் சேகரித்து வருகின்றது. மிக விரைவில் யாழ்ப்பாணத் திட் டத்திற்கான வரைவின் இறுதிவடிவம் தயாரிக்கப்பட்டுவிடும் என்று தெரிவிக் கப்படுகின்றது. (ஜ-99)

## மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் நேற்றுமுதல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டுவருகின்றன.

இதுவரை கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வந்த மிருசுவில் பகுதி மக்களுக்கான கொடுப பனவு கொடிகாமத்தில் இயங்கும் மிருசுவில் உப அஞ்சல் அலுவலகத் தில் வழங்கப்படுவதாகவும் தெரிவிக் கப்பட்டது.

(ஜ-117)

## கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் வந்தன

யாழ்ப்பாணம்,பெப்.10

கைதடி அரசின் ஆயுர்வேத வைத் தியசாலைக்கு வேண்டிய மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன.

நாவின்ன ஆயுர்வேத வைத்திய சாலைத் தலைமைக் காரியாலயததி லிருந்து, சுமார் 12 இலட்சத்து 83 ஆயிரத்து 757 ரூபா பெறுமதியான சகல தரப்பிலுமான மருந்து வகை களும் கப்பல்மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

கப்பலில் இருந்து இறக்கப்பட்ட இம்மருந்துவகைகள் தற்போது புதி தாக அமைக்கப்பட்ட கைதடி அரசின் ஆயுர்வேத வைத்தியசாலையிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை - .

கட்டடவேலைகள் யாவும் பூர்த் தியடைந்த நிலையில் இயங்கும் தரத்திலுள்ள இவ்வைத்தியசாலை யில் சிகிச்சைகளை ஆரம்பிக்குமாறு தென்மராட்சிப்பகுதி மக்கள் கோரிககை விடுத்துள்ளனர்.

(ம-10-15-180)

## மெய்வன்மைப் போட்டி

புன்னாலைக்கட்டுவன்,பெப்.10

சுன்னாகம் கோட்டைக்காடு அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை அதி பர் திருச்சி நவரத்தினம் தலைமை யில் இடம்பெறவுள்ளன.

பிரதமஅதிதியாக உடுவில் கல் விக் கோட்டப் பணிப்பாளர் அ.தற் பரானந்தனும் சிறப்புஅதிதியாக மல் லாகம் சாளம்பை முருகன் தேவஸ் தான அறங்காவலர் சபைத்தலைவர் இ.ஆனந்தனும் கலந்துகொள்வர்.

(ஜ-133)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று மட்டும்
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன், ரகுவரன் நடிக்க
நரசிம்மா (சிலர்) (C/20672)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், பூமிகா, மோனல்,
விவேக், வடிவேலு நடிக்க
பத்ரி (சிலர்)
(548)
காட்சிகள்: 11.00, 3.00 (புதியநேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
அஜித், ஜோதிகா, விவேக்
நடிப்பில்
பூவெல்லாம் உன் வாசம்
(C/20571)
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 3 (பு.நே.)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் கிழக்கைச் சேர்ந்த
ஓய்வுபெற்ற தபால் அதிபரும்
சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான
பரிபாலன சபை
முன்னாள் உப தலைவருமாகிய

**திரு. க. கனகராசா**

அவர்கள்

**சமாதான நீதிவானாக**

நியமிக்கப்பட்டமை குறித்து இன்று நடைபெறும்
பாராட்டு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

- சுன்னாகம் ஐயனார்
தேவஸ்தானம்.

(604)

உ
ஸ்ரீ சாமுண்டி அபயம்

### பருத்தித்துறை
### கோட்டுவாசல்
### அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோயில்

(தேவஸ்தானம்)

### 10ஆவது தை அமாவாசை - அருள்மிகு அபிராமிப்பட்டர் பெருவிழா

பாட்டு

நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ் முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

*நாளை (11. 02. 2002) திங்கட்கிழமை 12 மணிக்கு ஆரம்பமாகும்.*

சிவாச்சாரிய பெருந்தகை
ஸ்ரீலஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்கள்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை பிரதமகுரு,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஆதீனகர்த்தா
(மருதனார்மடம்) அவர்களினால் நல்லாசிகள் வழங்கி
அவரால் ஆரம்பிக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட

**அபிராமிப்பட்டர் பெருவிழா**

இன்று அதி விமரிசையாக நடைபெற ஆத்தாள்
அருள் கிட்டியுள்ளது.

பகல் 12.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை
விசேட அபிடேக ஆராதனை -
*அம்பாள் வசந்த மண்டபத்தில் வீற்றிருக்க*

1.00 - 2.00 மணிவரை
விசேட மங்கள இசை

2.00 - 2.30 மணி வரை
ஞாலமெல்லாம் பெற்ற தாய்
*வழங்குபவர்:*
அருட் பிரபாகரசீலர், சைவ சித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் B.A.
தும்பளை லட்சுமணன் தோட்டம்
வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் கோயில்
பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்

2.30 - 3.00 மணிவரை
"ஸ்ரீ சாமுண்டி ஆத்தாளே"
திரு. இரா.பஞ்சலிங்கம் B.A.
பரு. கலைஞர் குழாத்தில் இருந்து
*தெய்வீக இசை விருந்து*

3.00 - இருந்து
அபிராமி அந்தாதி 100 பாடல்கள்
*வழங்குபவர்:*
அருளிசைப்பேரரசு சாகித்திய கான சிரோன்மணி
உயர்திரு.நா.மு.வி.நவரத்தினம் M.Phill., (JA)
அணி செயல் கலைஞர்களுடன்
(தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**தேவகானாமிர்தம் அபிராமிப்பதிகம்**

I - II பாடல்கள் உட்பட மேலும் பல பாடல்கள்

I.
கலையாத கல்வியும் குறையாத வயதுமோர் கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணியில்லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும் தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும் தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய தொண்டரொடு
கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயில் மாயனது தங்கையே ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசன் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

II.
மிகையுள் சுரத்த வெம்பிணியும் துரத்த வெகுளியானதும் துரத்த
மிடியுஞ் துரத்த நரைதிரையும் துரத்த மிகுவேதனைகளும் துரத்த
பகையுந் துரத்த வஞ்சனையும் துரத்த பசியென்பதும் துரத்த
பாசந்துரத்த பதிமோகந்துரத்த பலகாரியமும் துரத்த
நரையும் துரத்த ஊழ்வினையும் துரத்த நாளும் துரத்த வெகுவாய்
நாவரண்டோடி கால் தளர்ந்திடும் என்னை நமனுந் துரத்துவாறோ
அகில உலகங்களுக்கும் ஆதார தெய்வமே ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசன் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்சாமி அபிராமியே!

வசந்த மண்டப விசேட பூஜைகள் யாவும் நிறைவேறி எம் பெருமாட்டி விசேட மங்கள வாத்தியம் முழங்க வீதி வலம் வந்தருள் வார். அனைவரும் வந்து அம்பாளைத் தரிசித்து இன்புறுவீர்களாக.

(C/20677) - விழா உபயகாரர்.

## முக்கிய அறிவித்தல்

### வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்

பாடசாலையின் அபிவிருத்தி கருதி ஆரம்பம்தொட்டு இன்றுவரை கல்விகற்ற மாணவர்களைக்கொண்டு 14.01.2002 அன்று புதிதாக பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். தலைவர் திரு. க.இராசதுரை (பீடாதிபதி), உப தலைவர் திரு. வ.சத்தியசீலன் (உ.திட்டமிடல் பணிப்பாளர்), திரு. செ.பொன்னுத்துரை (உப அதிபர்), செயலாளர் திரு. கா.நல்லதம்பி (பாடவிடய உத்தியோகத்தர்), உபசெயலாளர் திரு. பொ.பத்மநாதன் (அதிபர்), பொருளாளர் திரு. செ.நாகராசா (கணக்காளர்).

பண உதவி வழங்கவிரும்புவோர் மக்கள் வங்கி பல்கலைக்கழகக்கிளை, திருநெல்வேலி கண. இல. 51910க்கு அனுப்பிவைக்கவும். தனிப்பட்டரீதியில் எவருக்கும் பணம் வழங்க வேண்டாம் என்றும், வெளிநாட்டில் உள்ளோருக்கும் உறவினர்களைத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றோம்

*91/10, இந்து மகளிர் ஒழுங்கை. கந்தர்மடம்.* (544) தகவல்: கா.நல்லதம்பி

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை நனோராஜன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நனோராஜன் 08.02.2002 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் குணவதி தம்பதி களின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கஜன், சுஜா, டினேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பூபாலசிங்கம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*80, புங்கன்குளம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
M.மனோகரன்
(சகலன்)

(602)

### திருமதி தம்பிப்பிள்ளை கனகம்மா

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை கனகம்மா நேற்று (09.02.2002) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு தம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வசுடாட்சம், பத்மநாதன், தனபால சிங்கம், குகதாசன் (சுகாதாரத் திணைக்களம்), தனபாக்கியலட்சுமி காலஞ்சென்ற தவராசா மணிவண்ணன், சடாட்சரம் (கனடா), சிராளன் (பிரான்ஸ்), புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகதாம்பாள், நாகேஸ்வரி, சிவயோகேஸ்வரி, கணேஸ், புஸ்பராணி சைலஜா, சிவ லோகராணி (பிரான்ஸ்), பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

*448, நாவலர் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
த.மணிவண்ணன்
(மகன்)

(606)

### சின்னத்தம்பி கந்தையா

எழுதுமட்டுவாழை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கந்தையா கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டியில் நேற்று (09.02.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதி யினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவயோகலிங்கம், யோகராணி, யோகரஞ்சிதம், வசந்தினி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவி (லண்டன்), மலர் (டென்மார்க்), காலஞ்சென்ற நாகம்மா மற்றும் ஐயாத்தம்பி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*தேநீர்க்கடை,*
*எழுதுமட்டுவாழ்.*

தற்காலிக முகவரி:
*கிழவிதோட்டம் பிள்ளையார் கோயிலடி,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*

தகவல்:
சிவயோகலிங்கம்
(மகன்)

(C/20680)

# ‘தமிழ் எங்கள் உயிர்’ எழுச்சி நிகழ்வுக் காட்சிகள்



மன்னார் முத்தரிப்புப் பகுதியில் ‘தமிழ் எங்கள் உயிர்’ எழுச்சி நிகழ்வின் இறுதிநாள் விழா கடந்த வியாழனன்று நடைபெற்றது. விழாவின் தொடக்கத்தில் இடம்பெற்ற மங்கள இசை நிகழ்வின் காட்சி.



விழா நடைபெற்ற அல்லிராணி கோட்டை மைதானத்துக்கு அருகே கடல் நீரேரிப் பகுதியில் காணப்பட்ட பதாகைகள்.



விழாவில் கலந்துகொள்வதற்காக படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னாரின் பல பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கானோர் மைதானத்துக்கு வந்த காட்சி.



எழுச்சிவிழாவில் கலந்துகொண்ட மக்கள் மத்தியில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்), புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் சார்பில் கலந்துகொண்ட புளொட் உறுப்பினர் எஸ்.ரமேஸ் ஆகியோர் காணப்படுகின்றனர். (படங்கள்: தமிழ் நெற்)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீட்டும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இதே நடைமுறையை விரைவில் யாழ்ப்பாணத்திலும் அமுலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுவதாக ‘சிற்றி ஒவ் றிங்கோ’ கப்பல் முகவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கப்பல் மற்றும் விமானப் பயணிகளுக்கான பயண அனுமதி வழங்கும் நடைமுறை விரைவில் முற்றாக நீக்கப்பட இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

*(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)* (ஜ-3-7)

## சட்டவிரோதமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரக் கண்காணிப்புக் காவலை தீவிரப்படுத்த அரசு திட்டமிட்டு வருவதாகவும் -

செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இலங்கையில் இருந்து இத்தாலிக்கு சட்டவிரோதமாகப் பயணம் செய்த பலர் அண்மையில் கடலில் கைது செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

பயணமுகவர்களுக்குப் பெரும் தொகைப் பணம் செலுத்தி படகுகளில் செல்லும் இலங்கையர்களால் இத்தாலி அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஜ-3)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலுக்குச் செல்ல மீனவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தொழில் செய்வதற்கான ‘பாஸ்’ முறையும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

தொழில் முடிந்து திரும்பியதும் கட்டுமரங்களை படையினரின் கண்காணிப்பில் விட்டுச்செல்ல வேண்டும் என்ற நடைமுறையும் நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் படகுகளில் பொருத்தப்படும் வெளி இணைப்பு இயந்திரங்கள் தற்சமயம் படையினர் வசமேயுள்ளன. அந்த இயந்திரங்களை அடுத்த மூன்று தினங்களுக்குள் கடற்றொழிலாளர்களிடம் கையளிக்க படையினர் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை -

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளுக்கு நேற்றுச் சென்றனர்.

அங்கு படை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அவர்கள் பின்னர் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

யாழ்.கடலேரியிலும் அதிகாலை 3மணி முதல் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 2 மணிக்கு இறங்குதுறைக்கு கடற்றொழிலாளர் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அங்கு வழமையான சோதனைகளை முடித்துக்கொண்டு அதிகாலை 3மணிக்கு அவர்கள் தொழிலுக்குச் சென்றனர்.

(ஜ-3-51-117)

# அமைச்சர் மிலிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டார். கண்ணி அகற்றும் பணி ஓரிரு தினங்களில் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள பல அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்த அமைச்சர் அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அதைத் தொடர்ந்து வவுனியா படைத் தலைமையகத்தில் மாநாடு ஒன்றையும் அவர் நடத்தினார்.

மக்களின் மனமாற்றத்துக்கு ஏற்ப படையினரின் செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து அங்கு ஆராயப்பட்டுள்ளது. (ஜ-3)

## திருமலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன. மூதூர் பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாக்கல் செய்த மனுவும் நிராகரிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் 11 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் ஒன்பது அரசியல் கட்சிகளும், பதினொரு சுயேச்சைக் குழுக்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

(ஜ-3)

## அனுருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் அனுருத்த ரத்வத்தையின் இரு புதல்வர்களும் பொலீஸாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு இன்னமும் மறைந்து வசித்து வருகின்றனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகவும், சரணடையாது மறைந்து வாழும் சந்தேக நபர்கள் இருவரைப் பற்றியும் சி.ஐ.டியினர் நேற்று அனுருத்த ரத்வத்தையிடம் விசாரணை நடத்தினர்.

இதேவேளை -

பொலீஸ் தலைமையகத்தில் இந்த விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் கண்டி மடவளப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள அனுருத்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். படுகொலைகளின் சூத்திரதாரிகளைக் கைதுசெய்யுமாறு அவர்கள் கோஷமிட்டனர்.

(ஜ-7)

## கடற்படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படைக்குத் தேவையான உதிரிப்பாகங்களை சலுகை விலையில் வழங்கவும் அவர் இணங்கியுள்ளார்.

இலங்கைக் கடற்படைத் தளபதி கடந்த வருடம் பங்களாதேஷுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டதை அடுத்தே அந்நாட்டு கடற்படைத் தளபதி இலங்கை வந்துள்ளார். (ஜ-3)

## இளவரசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துவரப்படுவாரா என்பது தெரியவில்லை என்று பக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இளவரசி மாகிரேட் 1950இல் அரச பாரம்பரியங்களை மீறி கப்டன் பீற்றர் ரவுண்செண்ட் என்பவர் மீது காதல் கொண்டார்.

அரச குடும்பம் மற்றும் தேவாலயம் ஆகிய தரப்புகளில் இருந்து அதற்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அவர் தனது காதலை முறித்துக்கொண்டார்.

பின்னர் 1960இல் அந்தோனி ஆம்ஸ்ரோங் - ஜோன்ஸ் என்பவரை மாகிரேட் மணம் புரிந்தார். இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகிய நிலையில் 1978ஆம் ஆண்டு அவரது மணவாழ்க்கை விவாகரத்தில் முடிந்தது.

தீவிரமாகச் சிகரெட் புகைக்கும் பழக்கம் கொண்ட இளவரசி மாகிரேட்டின் உடல் நிலை கடந்த இரு தசாப்த காலமாக பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. இரண்டு தடவைகள் அவர் பக்கவாதத்தால் தாக்குண்டார்.

இளவரசி மாகிரேட்டின் மறைவுச் செய்தி பிரிட்டிஷ் மக்களை ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியிருக்கிறது.

இவரது மறைவு குறித்து உலகத்தலைவர்கள் பலர் இரங்கல் வெளியிட்டிருக்கின்றனர். (ஜ)


கோட்லெஸ் ரெலிபோன்
CLT 85 Sonyo - 5Km
விற்பனைக்கு உண்டு
அத்துடன் பனசோனிக் 2 லயின் பனபோன், பல நவீன முறையில் தயாரிக்கப்பட்டவை விற்பனைக்கு உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.
ரெலிபோன் பொருத்துவதற்குரிய உதிரிப்பாகங்கள் அனைத்தும் எம்மிடம் உண்டு.
செல்வம் ஸ்ரோர்ஸ்
330,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (605)

தரம் 5 மாணவர்களுக்கு
ஒரு நற்செய்தி!
பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க
திரு.வே.அன்பழகன் ஆசிரியர்
அவர்களால் தரம் 5 மாணவர்களுக்கு
புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்
இரண்டாவது பிரிவு ஆரம்பமாகவுள்ளது.
☆மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பதிவுகளுக்கு விரையுங்கள்.
*இடம்:* ஞானக்குழந்தை இல்லம், 10, சிவன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(335)


# மரண அறிவித்தல்கள்

## சண்முகப்பிள்ளை கதிர்காமன்

(கதிர்காமன் இரும்புத் தொழிற்சாலை உரிமையாளர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகப்பிள்ளை கதிர்காமன் நேற்று (09.02.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆயிரத்தம்மாவின் (சரஸ்வதி) அன்புக் கணவரும், சுரேஸ்குமாரின் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி **A/L** 2002 வர்த்தகப் பிரிவு மாணவன்) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*98, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (601)

தகவல்:
மனைவி, மகன்.

## திருமதி ரோமான் மாகிறேற் நல்லம்மா

ஊரணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவருமான திருமதி ரோமான் மாகிறேற் நல்லம்மா நேற்று நள்ளிரவு காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருள்திரு.ஆர்.சி.எக்ஸ் நேசராஜா
(மகன்-இயக்குநர், மறைக் கல்வி நடுநிலையம்)

*கச்சேரி - நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/20681)


D.C.M.
(ஆரியகுளம் சந்திக்கருகில்)
துரித மீட்டலும் - வினாவிடையும்
A/L 2002
வணிகக்கல்வி
ஆசிரியர்: N.உமாகாந்த்
B.Com (Hons)
ஆரம்பம் - புதன் -2.30p.m.
NOTE: வாரத்தில் 10மணித்தியாலங்கள்.
(603)

MURTHY
ADVERTISING SERVICE
2789
நீங்கள்
பலாலி யாழ் சேவையில்
விளம்பரம் செய்ய
விரும்புகிறீர்களா?
☆ பிறந்தநாள் ☆வர்த்தக
விளம்பரம் ☆மரண அறிவித்தல்
எதுவானாலும்
எமக்கு போன் செய்யுங்கள்.
மூர்த்தி
அட்வர்டைஸிங் சேர்விஸ்
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(421)

எமது புதிய வீடியோ CD
வெளியீடு
நாகார்ஜுன், சிம்ரன் நடித்த
K.S.ரவிக்குமாரின்
ஹலோ மாமா
பிரதிகள் உடன் பெறலாம்.
வீடியோ விமல்
(C/20678) யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ
CD வெளியீடு
நாகார்ஜுன் சிம்ரன் நடித்த
★ ஹலோ மாமா
★ புதிய அலை
பிரதிகளை உடன் பெறலாம்.
அல்டி
எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம்.
(C/20679)

புதிய வெளியீடுகளும், மலிவு விற்பனையும்
ITN இன் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு
தமிழ், ஆங்கில திரைப்பட CD களும்,
புதிய பழைய பாடல் CD களும், கர்நாடக CD களும்
மாபெரும் மலிவு விற்பனையில்!
இங்கு வாங்கும் பொருள்களுக்கும், ஒளிப்பதிவுக்கும் 5 % கழிவு.
உண்டு. இச்சலுகை 10.02.2002 - 18.02.2002 வரை மட்டுமே!
ITN
வீடியோ ஓடியோ
மியூசிக் சென்ரர்
NOTE:- இச்சலுகை பரமேஸ்வராச் சந்தி கிளையில் மாத்திரம்.
305, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.